நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்


தொகுதி - 110 | பகுதி - 10 | விலை ரூ. 10

திருவள்ளுவர் ஆண்டு - 2047 | அக்டோபர் - 2016





நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடையநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசை கல்லூரி
## கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறியாளர் **க.சி.அகமுடையநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறியாளர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இதழ் மணம் | 4 |
| 2. | தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்-(4) | 6 |
| | முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | |
| 3. | எட்டுத்தொகை நூல்களில் | 9 |
| | தமிழர் வாழ்வியல் சிந்தனைகள் | |
| | மறைமலை இலக்குவனார் | 11 |
| 4. | குறுங்கலித் துறையமைதி-ஓர் ஆய்வு | 15 |
| | பேரா. முனைவர் இ.கி.இராமசாமி | |
| 5. | தொல்காப்பியருக்குப் பரத்தமை உடன்பாடன்று | |
| | தமிழாகரர் தெ.முருகசாமி | 21 |
| 6. | சரபோசி மன்னர் வளர்த்த நுண்கலைகள் | |
| | முனைவர் ம.சா. அறிவுடைநம்பி | 28 |
| 7. | 'மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி' | |
| | உருவாக்கம்: செய்முறையும் பயன்பாடுகளும் | 34 |
| | முனைவர். ஆ.பூமிச்செல்வம் | |
| 8. | சங்கச் செய்திகள் | 41 |



வலைதளம் : www.maduraitamilsangam.com

: www.senthamilcollege

மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in

: principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

இளங்குமரனாரின் தனக்குவமை இல்லாத் தனிப்பெருநூல் என்னும் கட்டுரை மக்களின் சைகை மொழியின் தோற்றத்தை எடுத்து இயம்புகிறது. அதிலிருந்து மொழி தோன்றியதையும் தொல்காப்பியர் மொழிக்கு இலக்கணம் கண்ட தனித் தன்மையையும் விளக்குகிறார். நூன்மரபு தொடங்கி ஒன்பது இயல்கள் எழுத்து இலக்கணத்தையும் கிளவியாக்கம் சொல் படைப்பு இலக்கணம் தொடங்கி ஒன்பது இயல்களாகவும் எழுத்தும், சொல்லும் விளக்கம் பெறுகிறது. தொல்காப்பியருக்கு முன்னும் அவருக்குப் பின்பும் தொல்காப்பியத்தின் அடிப்படையில் பிற இலக்கண ஆசிரியர்களும் இலக்கணம் கண்டனர்.

எழுத்தும் சொல்லும் பொருள் இலக்கணத்தால் சிறப்புறும் என்பதை நுட்பமாக விளக்கும் ஆற்றல் தொல்காப்பியரின் பெருஞ்சிறப்பு; அறிஞர் இளங்குமரனார் தொல்காப்பியத்தில் தோய்ந்த புலமை உடையவர்; அவர் அரியவற்றையும் எளிமையாக விளக்கும் திறம் கற்பவர் நெஞ்சம் கொள்ளத்தக்கது. எளிதில் புரிதலும், இலக்கிய நயமும் அவருடைய தனித்தன்மை; எதையும் எளிதாகவும், இனிதாகவும், பேசவும், எழுதவும் வல்லவர் அப்பெரியார். அவருடைய நடை படிக்கத் தூண்டும். கல்வி நலம் சேர்க்கும். மாணவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்து கற்பதற்கு செந்தமிழ் இதழை சேர்த்துக் கட்டமைப்புச் செய்து வைத்துக் கொள்ளுதல் நலம்; அதற்கு செந்தமிழ் சந்தா அனுப்பிப் பயன் பெறுக. இதழ் வளர்ச்சிக்குப் பெரும்பொருள் செலவாகிறது; அதனை ஈடு செய்யத் தமிழ் அன்பர்களும் கல்வியாளர்களும் உதவுக.

பேராசிரியர் இ.மறைமலை, ''எட்டுத்தொகை நூல்களில் தமிழர் வாழ்வியல் சிந்தனைகள்'' என்னும் கட்டுரை வரைந்துள்ளார். ஐங்குறு நூற்றுப் பாடலை சமூக ஆவணம் என்றும் தொல் சமய சப்பான் சிண்டோ வழிமுறை என மேற்கோள் காட்டியுள்ளது வியப்பளிக்கிறது. சங்க இலக்கியம் நடப்பியலும் இயற்கை நலம் சார்ந்த கற்பனையும் நிறைந்த மானிடம் அனைத்திற்கும் பொதுமையாகும். ஐங்குறுநூற்று ஆசிரியர் தலைவியை அன்பு நிறைந்த மனையறம் காப்பவளாகவும் குறை அறியாமையால் தாயாகவும் படைத்திருக்கும் நன்மை போற்றற்குரியது. தலைவன் இளமையும், வளமையும் மிக்கவனாக பாட்டும், கூத்தும் உடையவனாக இற்சிறப்பு அறியாச் சிறுமையுடையவன்; அதனால் தலைவி ''பாணனும் வாழ்க'' என்று அவன் சிறுமையை பாணனும் என்னும் உம்மையால் விளக்கும் திறம் இன்புறத்தக்கது. ''நனையகாஞ்சி சினைய சிறுமீன் யாணர் ஊரன்'' என்னும் தொடர் இறைச்சிப் பொருளது. வேட்டோள் விருப்பம் மிக்க தலைவி; தமிழ்ச் சமூகம் இயற்கையோடு எளிமையாக வாழ்ந்த இனிய காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் சமூக ஆவணம் எனலாம். சங்க இலக்கியத்தில் பக்தி இலக்கிய வாடை இருப்பதாகக் காட்ட வேண்டுமா?

பேராசிரியர் இ.கி.இராமசாமி அவர்கள், குறுங்கலித் துறையமைதி– ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் எழுதியுள்ளார்; கட்டுரையைப் புறநானூற்றுப் பாடல்களை மேற்கோள் காட்டி நயம்பட விளக்கியுள்ளார். பெருந்திணைக் குறுங்கலி என்பது தலைவி நலம் பீர்க்கம் பூப்போலப் பசப்ப அருளாராய்த் தலைவன் பிற மகளிருடன் வாழ்தலைக் கடிந்துரைத்து தலைவியோடு இல்லறம் நடத்த நல்லுரை பகர்வதாகும். விடுதல் அறியா விருப்பினளான தலைவியின் துயரத்தை மாற்ற வேண்டிப் புலவர் பெருமக்கள் அறிவுறுத்தும் பாடல்கள் இப்பகுதியில் இடம் பெறுகிறது.

வாயில்கள் எல்லாம் இருவர் மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடைய என்றவாறு. இருவராவார் தலைவனும் தலைவியும் என்பதனால் தலைவியை நீங்கிய இல்லறம் சிறவாதாகையால் சான்றோர் இல்லறம் சிறக்கத் தலைவனை அறநெறி நிற்க வேண்டியது குறுங்கலித் துறை என்னும் ஆசிரியர் கூற்று சிறப்புடையதாகும்.

தமிழாகரர் தெ.முருகசாமி, "தொல்காப்பியருக்குப் பரத்தமை உடன்பாடன்று" என்னும் கட்டுரை வரைந்துள்ளார். மனித வாழ்க்கையின் உயர்வும் சிறப்பும் தற்தகையுடன் ஒழுக்கநெறி நிற்றல் என்னும் பேற்றில் அமைந்துள்ளது. மனித வாழ்வு புனிதமானது; வாழ்வின் தூய்மையை வலியுறுத்தும் தொல்காப்பியர் பிறிது விரும்பார் என ஆசிரியர் விளக்கும் மாட்சி போற்றற்பாலது. நில உடைமைச் சமுதாயத்தின் மிச்சம் சொச்சமாக இருந்த பரத்தையர்குடி இந்திய விடுதலை இயக்கப்புரட்சித் தீயில் மாற்றமும் கலை வாழ்வும் உயர்வும் பெற்று உயர்வு நோக்கி வளர்ச்சியுற்ற சமுதாயமாக அமைந்த நற்பேற்றினை பெற்றது; பெண்ணினத்தின் விடுதலை வாழ்வு எனலாம்.

பேராசிரியர் ம.சா.அறிவுடைநம்பி மேனாள் புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்; அருந்தமிழ்ச் செல்வர் சாம்பசிவனாரின் தவப்புதல்வர்; சாம்பசிவனார் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கப்புலவர்; புலவர், வித்வான், பண்டிதம் போன்ற படிப்புகள் இச்சங்கத்தில் நடந்த காலத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்; அவருடைய திருமகனார் அறிவுடைநம்பி பெயருக்கு ஏற்ற கல்வி நலமும் அடக்கமும் உடைய சான்றோராகத் திகழ்ந்தவர். சிறிது காலத்திற்கு முன்பு இளமையிலேயே எதிர்பாராத வண்ணம் இயற்கையெய்தினார்; நீள நினைத்தற்குரிய சான்றோர் அவர் நம் பழைய செந்தமிழ் இதழில் எழுதிய சரபோசி "மன்னர் வளர்த்த நுண் கலைகள்" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது.

முனைவர் ஆ.பூமிச் செல்வம் எழுதிய "மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கம்" என்னும் கட்டுரை வந்துள்ளது. அனைத்தையும் கற்று இன்புறுக.

# தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்

முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

தொல்காப்பியத்தின் *கட்டமைவு* தனிப் பெருஞ் சிறப்பினது. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. தமிழ்நாடு, தமிழர் என்னும் பெயர்கள் எப்பொழுது தோன்றின? தமிழ் தோன்றிய பின்னர்த் தானே இப்பெயர்கள் தோன்றின. ஆனால் உண்மையென்ன?

குறிஞ்சி முதலாக நிலங்கள் முதற்கண் தோன்றின. அந்நிலத்தில் புல்பூண்டு முதலாக மக்கள் வரை தோற்றமுற்றன. மக்கள் சைகை, முகக்குறி முதலாய வழியால் தம் குறிப்பைப் பிறர்க்கு உணர்த்தி மொழி அமைந்தது. அம்மொழி அமைந்த பின் *அம்மொழியால் நாடும், இனமும், தமிழ்நாடு, தமிழர் எனப் பெயரமைவுற்றன.*

பின்னது முன்னதாயது; முன்னது பின்னது ஆயது. அது இயற்கையாகவும் நிலைத்துவிட்டது!

தண்ணீர் வேண்டும் என்பவன் வாய் மேல் கைதூக்கிக் கைவிரலை வாய்ப் பக்கம் நீட்டினான்! அதனை அறிந்தவன் தண்ணீர் இடத்தை விரலால் சுட்டினான்! நீர் பருகினான்! வயிற்றைக் காட்டிக் கையை விரித்தான்! "பசிக்கிறது" என்று சொல்வதை உணர்ந்து உணவு தந்தார்!

உறக்கம் வந்தது. தலைப்பக்கம் கை வைத்துக் கண்ணை மூடிக் காட்டினான்! 'போ' என்பதன் அடையாளமாக இருமுறை அகங்கையை அசைத்துக் காட்டினான். வரவேண்டுமானால் புறங்கையை இருமுறை தன் பக்கம் காட்டி அழைத்தான். ஆதலால் *கூத்துத் தமிழே* (நாடகத் தமிழே) *முதற்கண்* தோன்றியது.

காடு கரைகளில் தனியே போனான்! அவனை அறியாமல் ஏதோ ஒலியெழுப்பிக் கொண்டு அச்சம் இல்லானாய் நடந்தான். பறவைகள் போலவும் விலங்குகள் போலவும் ஒலி எழுப்பினான்! அது *இசைத் தமிழ்* மூலமாயிற்று!

கா கா, கொக் கொக், குர் குர், கீர் கீர், சல சல எனப் பலவகை ஒலிகளைக் கேட்டான். கேட்டுக் கேட்டு கா கா, காக்கா, காக்கை, காகம் என்றும், கொக்கு, கொக்கி, கொக்கன், கொக்கரை, கொக்குறை என்றும், குர்க்கு, குரக்கு, குரங்கு, குரங்குக் கட்டை, குரங்கன் என்றும், கீரி, கீரிப்பூச்சி, கீரை என்றும், சலம், சஞ்சலம், சலதி, சலதாரை என்றும் சொற்களை உருவாக்கினான். குவா குவா என்றது *வாத்து* ஆகியது 'மா'

என்றது *மாடு* ஆயது. *கல்* என்னும் அருவி ஒலி *'மலை'* ஆயது. சில் என்றது *சிலந்தி* என்றும், ஈ என்றது 'ஈ' எனவும் கிண்கிண் என்றது *'கிண் கிணி'* எனவும் 'சல் சல்' என்றது *சலங்கை சல்லரி* எனவும் 'அம் அம்' என்று பால்குடித்த குழந்தை ஒலி *அம்மம், அம்மா, அமிழ்து, அமிர்து, அமுது, அவிழ்து* எனவும் விரிந்து சொல்லுருப் பெற்று இயலாகியது. கூத்துத் தமிழ், இசைத் தமிழ், இயற்றமிழ் என முறையே தோன்றினும் 'இயலிசை நாடகம்' எனவே முன்னது பின்னதாகவும், பின்னது முன்னதாகவும் அமைந்து அம்முறையே செம்முறை ஆகிவிட்டது.

பொருள்தான் முதற்கண் இருந்தது. அதனைக் குறிக்கவே சொல் வந்தது. சொல்லமைப்புக்கே எழுத்துத் தோன்றியது. பொருள், சொல், எழுத்து என்று அமைந்தும் முன்னவை போலவே முன்னையது பின்னையதாகவும், பின்னையது முன்னையதாகவும் அமைந்ததுவே *எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்* என்பவையாம். மரபை எப்படிக் சுட்டிக் காக்கிறார் தொல்காப்பியர் என்பது அதிகார முறை வைப்பாலேயே நன்கு விளங்கும்.

*இனி, எழுத்ததிகார இயல்கள் ஒன்பது.* அவை: நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல் தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பவை.

*சொல்லதிகார இயல்கள் ஒன்பது:* அவை: கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பவை.

*பொருளதிகார இயல்கள் ஒன்பது:* அவை : அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல் என்பவை.

ஒவ்வோர் இயல் தொடர்பும் தனிப்பெரும் கட்டமைவுடையவை. அவற்றை *உரை வரைவு விளக்கத்தில் காணல்முறை.* மற்றை மொழி இலக்கணங்கள் எழுத்து, சொல் என்னும் இரண்டுமே கூறத் தமிழ்த் தொல்காப்பியமே நாமறி அளவில் *பொருளதிகாரமென* மாந்தர் அகவாழ்வு, புறவாழ்வு, கலைவாழ்வு என்பன பற்றி விரித்துக் கூறுகின்றது. அதற்கு முன்னை நூல்கள் நமக்குக்கிடையா நிலையில் முன்னைத் தொல்பழ நூலாக வாய்த்தது அதுவே ஆதலால்!

பேரகத்தியம் என வெளிப்பட்ட சிறு தொகைநூல், பெரும் புரட்டு நூல். முத்துவீரியத்திற்குப் பிறபட்ட நூல் என்பது என்னால் நாற்பதாண்டுகளுக்கு முன் வரையப்பட்டது.

*அகத்திணை* இயலில் *ஏழுதிணை* வகுக்கிறார். அவ்வாறே *புறத்திணை* இயலில் *ஏழு திணை* வகுக்கிறார்.

"அகங்கை ஏழானால், புறங்கையும் ஏழு தானே" எனப் பழைய உரைகாரர் அருமையாக ஒப்பிட்டுக் காட்டுகின்றனர். மெய்ப்பாட்டியலில் எண் வகை மெய்ப்பாடுகளைக் கூறுபவர் நகை முதலியவற்றிற்கு நான்கு நான்கு நிலைக் களங்களைக் கூறுகிறார்.

*"எள்ளல் இளமை பேதைமை மடனென்*
*றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"*

எட்டற்கும் வரம்பொடு நான்கு நான்கு நிலைக்களங்களே கூறுகிறார் (1198-1205) இவ்வாறு முப்பத்திரண்டு கூறியவர், பிற நிலைக்களங்கள் என முப்பத்திரண்டு கூறுகிறார் (1206).

அகனைந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை ஆறுபகுதிகளாகப் பகுத்து,

*"புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்*
*நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு*
*தகுமுறை நான்கே ஒன்றென மொழிப* -(1207)

என ஆறற்கும் நான்கு நான்கு நயனுற மொழிகிறார்.

உவம உருபுகளை 'ஆறாறு' (36) என்று கூறி, *வினைப்பால் உவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமம்* எனப்பகுத்து ஒவ்வொன்றற்கும் எட்டு உருபுகளைச் சுட்டுகிறார்.

*"அன்ன ஆங்க மான இறப்ப*
*என்ன உறழத் தகைய நோக்கொடு*
*கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்"*

இவ்வாறே பிறவும் கூறுகிறார் (1233).

செய்யுளியலில் *மாத்திரை* தொடங்கி *வண்ணம்* வரை, "ஆறுதலையிட்ட அந்நாலைந்தும் (26) அம்மை முதலா இழைபு முடிய எட்டும் (8) ஆக 34 பிரிவுகளையும் முறை மாறா வகையில் கூறி முடித்து மரபியல் தொடங்குகிறார்.

*இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற் பெயர்* என்பனவற்றை முன் வைத்து மூன்றன் பெயரையும் முடித்து, *"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"* (1569) எனச் சொல்லியதை முடிக்கிறார்! முன்னிருந்து வந்தவர், பின்னிருந்து முன்னாகச் செல்லும் உத்தி வகையால் முடிக்கிறார்! இது பழமரபு அல்லவா! இதன்பின், முற்சேர்க்கை, பிற்சேர்க்கை, இடமாற்றம், மரபுக்கு ஏற்காதவை என ஒட்டுமானங்கள் நிகழ்ந்தமையைத் தனியே *'மரபியல் ஆய்வு'* என நூலாக வரைந்துள்ளேன்.

தொடர்வோம்.

***இரா.இளங்குமரனார்.***

# எட்டுத்தொகை நூல்களில் தமிழர் வாழ்வியல் சிந்தனைகள்

**மறைமலை இலக்குவனார்**

எட்டுத்தொகை நூல்கள் தமிழர் வாழ்வியலைத் தெளிந்த ஓவியம் போன்று அமைவுறக் காட்டுகின்றன எனல் மிகையன்று. தமிழர் தம் காதல் வாழ்வும் வீரச்சிறப்பும் கொடை நலனும் படைத்திறனும் மிகச் சிறப்புடன் காட்டும் பான்மையால் செய்யுளில் எழுதப் பெற்ற சமூக ஆவணங்கள் என இவற்றை அழைக்கலாம்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகியவை அக ஒழுக்கத்தையும் புறநானூறு தமிழர் தம் வீரச்சிறப்பையும் பதிற்றுப் பத்து சேரர் வரலாற்றையும் பரிபாடல் சமய நம்பிக்கைகளையும் எடுத்துரைக்கின்றன எனக் கூறலாமெனினும் இவை அங்ஙனம் பொருள் வரையறை செய்து கொண்டாலும் பல்பொருளும் விரவிய பான்மையன எனலே பொருந்தும். அகப்பாடல்களில் உவமைகளின் வாயிலாகவும் உருவகங்களின் மூலமாகவும் பல வரலாற்றுச் செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.

நூல் நுவலும் திறத்தை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் நோக்கினால் இச்செய்திகளைப் பகுத்துணரவியலும். எடுத்துக்காட்டாக ஐங்குறு நூற்றின் முதற்பிரிவாக விளங்கும் ஓரம்போகியார் பாடிய மருதத்தில் முதற்பத்துப் பாடல்களாக விளங்கும் வேட்கைப்பத்து தனது முதற்பாடலில் இவ்வாறு குறிப்பிடுகிறது.

*"வாழி ஆதன் வாழி அவினி*
*நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!*
*என வேட்டோளே யாயே யாமே*
*'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்*
*யாணர் ஊரன் வாழ்க*
*பாணனும் வாழ்க!' என வேட்டோமே!*

இப்பாடலையே ஒரு சமூக ஆவணமாக நோக்கினால் மேலும் பல செய்திகளைப் பெறலாம். முதற்செய்தி வழிபாட்டைப் பற்றியது. அக்காலத்தில் மக்கள் தங்கள் எதிர்பார்ப்புகளையும் விழைவுகளையும் தங்களால் ஆற்றல் மிக்கது என நம்பப்படும் ஒன்றிடம் வேண்டிக் குறையிரந்துளர். இன்றும் சப்பான் நாட்டில் சிண்டோ என்னும் தொல்சமயக் கோயில்களில் மக்கள்

தாங்கள் விழைவன நிறைவேற வேண்டும் என்று குறையிரப்பதைத் தங்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளமையைக் காணமுடிகிறது.

அங்கே கோயில் முன்னர் அமைந்துள்ள மரங்களில் தமது விழைவுகளை ஒரு மரத்துண்டிலோ அல்லது தகட்டிலோ எழுதித் தொங்கவிடுகின்றனர். இவ்வழக்கம் அங்குள்ள பௌத்தக் கோயில்களிலும் காணப்படுகிறது.

இப்பாடலிலும் இதன்பின் வருகின்ற ஏனைய ஒன்பது (வேட்கைப்பத்து) பாடல்களிலும் தலைவியின் விழைவு தனது மன்னனின் நலனையும் நாட்டின் வளத்தையும் வேண்டுவதாகவே அமைந்துள்ளதனைக் காண்கிறோம்.

*"நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க"* எனும் ஒரு வரியிலே அக்காலத் தமிழர் ஒரு நாட்டின் வளத்திற்குரிய அடிப்படைகளை நன்கு அறிந்திருந்தனர் என்பதனைக் காட்டுகிறது. உணவுப்பொருளில் தன்னிறைவும் மிகுதியான தங்கத்தின் இருப்புமே ஒரு நாட்டை வளமிக்கதாகத் தலைநிமிர்ந்து விளங்கக் காரணமாகிறது. இதனையுணர்த்தும் வகையில் இந்த ஒரடி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பொதுநிதி (Public Finance) பற்றிய மேலைப் பொருளியல் வல்லுநர்களின் தோற்றத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பே சங்கப் புலவர்கள் பொருளியல் பற்றிய விரிந்த அறிவைப் பெற்றிருந்தமைக்கு இந்த ஒரடியே போதுமெனலாம்.

*"நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்"* என்னும் ஒரடி பயிரினத்தையும் உயிரினத்தையும் இரு கண்களாகக் கருதிப் போற்றிய அற்றைத் தமிழர் தம் சூழலியல் அறிவைப் புலப்படுத்துகிறது. ஐங்குறுநூற்றுப் பாடல்களில் கூறப்பட்டுள்ள உயிரினங்களையும் பயிரினங்களையும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் தமது உரையில் விரிவுற விளக்கியுள்ளார்கள். "குடும்ப வாழ்வை வெற்றியுடன் நடத்துவதெங்ஙனம்?" என்பது குறித்து மேலைநாடுகளில் நூறாயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்தவண்ணமுள. அவற்றைப் பன்னூறாயிரக்கணக்கானோர் வாங்கிப் படிப்பதையும் காண்கிறோம்.

> *"ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்*
> *ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"*

என்னும் பாலைக்கலிப்பாடலின் (பாலைக்கலி–12) இரண்டு அடிகள் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கைக்குரிய அடிப்படையைச் சிறப்பாக எடுத்துரைப்பதைக் காண்கிறோம்.

அற்றைத் தமிழர் வாழ்வியல் விழுமியங்களைச் சிறப்புறப் போற்றியமையை எட்டுத்தொகை நூல்கள் நன்கு நவில்கின்றன. ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாகப் பின்வரும் நெய்தற்கலிப் பாடலைக் கூறலாம்.

*"ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பெனப் படுவது தன்கிளை செறாமை*
*அறிவுஎனப் படுவது பேதையர்சொல் நோன்றல்*
*செறிவு எனப்படுவது கூறியது மறாமை*
*நிறைஎனப் படுவது மறைபிறர் அறியாமை*
*பொறைஎனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"*

வாழ்வியல் விழுமியங்களை இத்துணைத் தெளிவாகவும் செறிவாகவும் அதே வேளையில் எளியமுறையிலும் வேறெந்த மொழியிலும் கூறப்பட்டிலது. "Culture" என்னும் ஆங்கிலச் சொல்லுக்குக் "கலாசாரம்" என்னும் தவறான மொழியாக்கம் நிகழ்ந்தபொழுது அதனைத் தவிர்த்துப் 'பண்பாடு' என்னும் எழிலார்ந்த சொல்லாக்கம் ஏற்பட்டது 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்னும் இப்பாடலடியின் தாக்கத்தாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

*"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லெனச்*
*செய்வினை கைம்மிக எண்ணுதி"* குறுந்தொகை - 63

*"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்*
*அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு இல்"*
நற்றிணை -214

என்பன போன்ற பாடலடிகள் பண்டைத்தமிழர் பொருளின் சிறப்பை அறிந்து அதன் சமுதாயப் பயனையும் வலியுறுத்தியமைக்குச் சான்றாகின்றன.

*"இனைநல முடைய கானம் சென்றோர்*
*புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயிற்*
*பல்லியும் பாங்கொத்து இசைத்தன*
*நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே"* பாலைக்கலி-10

என்னும் பாடலடிகள் அற்றைத் தமிழர் தம் நம்பிக்கையை எடுத்துரைப்பன. அதே வேளையில் பிரிவுத்துயரால் மனவழுத்தம் மிக்கிருந்த மகளிரை

உளவியல்சார் மருத்துவ நோக்கில் (Psychotherapy) ஆறுதல்படுத்தவும் அற்றைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பதற்கும் சான்றாகின்றன.

*"விரிகதிர் மண்டிலம் வியல்விசும்பு ஊர்தரப்*
*புரிதலை தளையவிழ்ந்த பூஅங்கண் புணர்ந்து ஆடி*
*வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்-*
*துனிசிறந்து இழிதரும் கண்ணின்நீர் அறல்வார*
*இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு*
*நனிவிரைந்து அளித்தலின் நகுபவள் முகம்போலப்*
*பனிஒரு திறம் வாரப் பாசடைத் தாமரைத்*
*தனிமலர் தளைவிடூஉம் தண்துறை நல்லூர!"*

கலித்தொகை-மருதம் 71

என்னும் கலித்தொகைப் பாடல் வழங்கும் காட்சி மிகவும் சுவைக்கத்தக்கது. ஞாயிறு எழுதலும் தாமரை மலர்தலும் தேன் வடிதலும் அதனை உண்ண வண்டு சூழ்தலும் இயற்கையில் காணக்கிடைக்கும் எழிலார்ந்த காட்சியே; எனினும் இதனை ஓர் அழகிய குடும்பக் காட்சியாகச் சங்கப்புலவர் உருவகப்படுத்தியளிக்கும் திறம் போற்றற்குரியது. பரத்தைவயிற் பிரிந்து புறத்தொழுக்கம் மேவித் தலைவியைத் தலைவன் பிரிந்துறைந்த வேளையில் தலைவி தனித்திருந்து வாடுகிறாள். ஊடல் மிகுகின்ற வேளையில் தலைவன் வந்து சேர்கிறான். ஊடலைப் போக்கத் தலைவியின் காலில் விழுகிறான். இதனைக் கண்ட தலைவி அகமகிழ்கிறாள். முக மலர்ந்து நகுகிறாள். தாமரை மலர் இலைகளிடையேயும் மொட்டுக்களிடையேயும் தனியாக ஓங்கி மலர்ந்து தேன் வடித்து நிற்றற்கு உவமையாகத் தலைவியின் மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கும் நகைமுகம் கூறப்பட்டுள்ளது.

### பரிபாடலின் கலைநயம் :

முரண்பட்ட ஒலிகளைத் தொகுத்து வழங்கி, அம் முரண் மூலம் கலைத்திறனை வெளிப்படுத்தும் உத்தியைச் செவ்வேள் குறித்து நல்லழிசியார் இயற்றிய ஒரு பரிபாடல் செய்யுள் மூலம் அறிகிறோம். திருப்பரங்குன்றத்தில் ஒன்றினுக்கொன்று மாறுபட்ட நயமிகு ஒலிகள் பல நிறைந்திருக்கும் என்று நல்லழிசியார் தமது பாடலில் குறிப்பிடுகிறார். பாணருடைய இனிய யாழிசை ஒருபுறமும், வண்டுகள் இமிரும் இசை மற்றொரு புறமும், வேய்ங்குழலின் உள்ளங்கரைக்கும் இசை ஒரு புறமும் தும்பிகளின் பண்ணார் இசை மற்றொரு புறமும் முழவின் முழக்கம் ஒரு புறமும் அருவியின் ஆர்ப்பரிப்பு மற்றொரு புறமும் பாடல் வல்ல விறலியர்

ஒருபுறம் ஆடிடவும் மற்றொரு புறம் காற்றின் அசைவினால் பூங்கொடி அசைந்தாடுதல் மற்றொரு புறமும் பாண்மகள் பாலைப்பண்ணை அழகுறப் பாடுவது ஒரு புறமும் ஆடுகின்ற மயிலின் அரிந்த குரல் மற்றொரு புறமும் என வேறுவேறான இசைமாறுபாடுகள் ஒருங்கு திருப்பரங்குன்றத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. (பரிபாடல்–17) என அவர் பாடலில் கலைநயந் தோன்றக் குறிப்பிடுகிறார்.

யாழிசை–வண்டிசை, குழலிசை–தும்பியிசை, விறலி ஆடல் – பூங்கொடி அசைந்தாடல், பாடினியின் பாலைப் பண்–மயிலின் அரிந்த குரல் என முரண்களை நிரல்படுத்தி, மாறு அட்டான் குன்று எனப் புகழப்படும் திருப்பரங்குன்றத்தில் இத்தகைய மாறுபாடுகளைக் கலைக்கண்ணுடன் ஏற்றுக் கொள்ளும் மக்களின் கலையார்வத்தைப் புலப்படுத்துகிறார் எனக் கொள்ளலாம்.

## ஒலிச்சூழலமைவும் வாழ்வியல் விழுமியங்களும் :

ஒலிச்சூழலமைவின் வழி வாழ்வியல் விழுமியங்களை நயம்பட உரைத்தல் சங்கப் புலவரின் பாடுநெறிகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது. 'புன்னையினது மேலோங்கி வளைந்த கரிய அடித்தண்டினையுடைய பெரிய சினையிலே புதுவதாக வந்து தங்கிய வெளிய நாரை நரலுதல் ஆய் அண்டிரனது நாளோலக்கத்திலே இரவலர் பரிசிலாகப் பெற்ற அழகு செய்யப்பட்ட நெடிய தேரினது ஒலி போல் ஒலிக்கும் என்றுரைக்கும்' நற்றிணைப் பாடல் (167) இயற்கையெழிலையும் "கொடை" என்னும் வாழ்வியல் விழுமியத்தையும் ஒரே குரலில் போற்றிப் பாராட்டுவதைக் காண்கிறோம். நாரையின் ஒலிச்சூழலமைவும் ஆய் அண்டிரனின் நாளோலக்கம் என்னும் வரலாற்றுச் சூழலமைவும் ஒப்ப நோக்கப் படுவதுடன் நாரைக் கூட்டத்தின் நரலுதலை எண்ணுந்தோறும் ஆய் அண்டிரனின் நாளோலக்கத்தையும் அவனால் பரிசிலாக வழங்கப் பெற்ற தேர்களின் ஒலிச் சூழலமைவையும் பாடலைக் கற்போர் மனக்கண்ணில் தோன்றுமாறு செய்யப்பட்டுள்ளது. மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் ஆய் அண்டிரனின் நினைவு நிலைத்து நிற்க வழி செய்த பெயர் தெரியாத அப்புலவர் நம் போற்றுதலுக்குரியவர்.

ஓரம்போகியார் இயற்றிய பாடல் ஒன்றில் "அஃறிணையாகிய கம்புள் கோழி தன் பெட்டையைக் கூவியழைக்கும் கழனியூரனே! தலைவியை வரைவு கொள்ளுதற்குரிய முயற்சி மேற்கொள்ள நீ அறிந்திலையோ" (ஐங்குறுநூறு : தோழி கூற்றுப்பத்து –60) என அறிவுறுத்தும் வகையில் கம்புள் பறவையின் அகவல் ஓசை பொருள் நயம்பட விளக்கப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்களின் சிறப்பும் வாழ்வியல் விழுமியங்களை அவை எடுத்துரைக்கும் பாங்கும் விரிக்கிற்பெருகும். குடும்பவாழ்வின் தனித்தன்மை வாய்ந்த சிறப்பை எடுத்துரைத்துச் சமுதாய அமைப்பு வலிமையுடன் திகழ்ந்திடச் சிறந்த குடும்பவாழ்க்கை தேவை என்பதனை வலியுறுத்திய செவ்வியல் இலக்கியங்கள் சங்க இலக்கியங்களே. ஏனைச் செம்மொழிகளின் செவ்வியல் இலக்கியங்களில் இத்தகைய போக்குக் காண இயலவில்லை.

*"யாயும் ஞாயும் யாராகியரோ"* எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் காதலின் சிறப்பை வலியுறுத்தும் பாங்கையுணர்ந்து அப்பாடலையும் அதன் ஆங்கில மொழியாக்கத்தையும் இலண்டன் சுரங்கத் தொடர் வண்டிகளில் இடம்பெறச் செய்துள்ள செய்தி (The Hindu-dt.1-7-2001) இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒப்புரவு பேணிச் சமுதாய நாகரிகம் சிறந்திட வழிகாட்டுவனவும் சங்க நூல்களே என்பதனை அறிஞர் பாராட்டி விளக்கியுள்ளனர். காதலும் மானமும் வீரமும் ஈகையும் தமிழரால் நெறிப்படப் போற்றப்பட்ட பாங்கினை உலகம் உணர்ந்து போற்றும் வகையில் பரப்புரை மேற்கொள்ளல் தமிழறிஞர் தம் தலையாய கடமையாகும்.

இந்நூல்களைப் படிப்பதுடன் இவை போற்றும் வாழ்வியல் விழுமியங்களைக் கண்ணெனப் போற்றி வாழ்வில் கடைப்பிடித்தல் வீட்டுக்கும் நாட்டுக்கும் நலம் பயக்கும்.

*"சங்கத் தமிழ்பாடித் தமிழர்புகழ் வளர்ப்போம்*
*எங்கும் உறவுகொண்டு ஏற்றநிலை காண்போம்"*

# கவியரங்கில் புலவரேறு

– இரா.இளங்குமரனார்

மோராய்ச்சி கடைவதுபோல் மூலையிலே இருந்தோமை
ஆராய்ச்சி செய்யவென அவைகூட்டி அரங்கேற்றி
சீராய்ச் சிறந்தொளிரச் செந்தமிழை வாழ்வித்த
காவியச் சிறந்தாளின் கடப்பாடு பெரிதன்றே.

# குறுங்கலித் துறையமைதி - ஓர் ஆய்வு

பேரா.முனைவர் **இ.கி. இராமசாமி**
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ் உயராய்வு மையம்
யாதவர் ஆடவர் கல்லூரி
மதுரை–17

## சொற்பொருள் விளக்கம் :

குறுங்கலி என்பது ஒருதுறை; பெருந்திணையின் உட்பிரிவு; வேறு மகளிரை விரும்பிய ஒருவனுடைய காதல் கெடும்படி சொல்லுதல் என்று புறப்பொருள் வெண்பாமாலை விளக்கமுரைக்கின்றது.[1] ஒருவனால் துறக்கப்பட்ட அவன் மனைவியை அவனோடு சேர்க்கும் பொருட்டு நீ இவள் பால் அருள்செய்தல் வேண்டுமென வேண்டுதல் என்பது குறுங்கலித் துறைசார்ந்த பாடல்களின் பொருண்மை ஆகும்.[2]

வையாவிக்கோப் பெரும்பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; மலைநாட்டை உடையவன்; மயிலுக்குப் போர்வை கொடுத்தவன்; ஆவியர்குடியிற் பிறந்தவன். "வையே கூர்மை"[3] என்று தொல்காப்பியம் கூறுவதனால் ஆவியர்குடி கூர்மையானது என நேர்பொருள் கொள்வதைவிடக் "கூர்வாள்" கொண்ட வீரமிக்க ஆவியர்குடி என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமாகும். பேகன் தனக்குரியவளாகிய கண்ணகியை விலக்கிவிட்டு மற்றொரு அழகிய பெண்ணோடு நல்லூரில் வாழ்ந்தான். அவனிடம் சென்ற கபிலர், பரணர்/வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோர் அவனைக் கண்ணகியுடன் இல்லறம் நடத்துமாறு இரந்து பாடினார். இதனைக் கைக்கிளைத் திணை சார்ந்த குறுங்கலி என்பார் நச்சினார்க்கினியர்[4]. உ.வே.சா. இதற்குத் தாதபநிலை என்ற துறையினையும் பொருத்திக்காட்டுவார்.[5] தாபதநிலை என்பதற்குக் கணவனை இழந்தநிலை (பெரும்பிரிவு) என்று பொருள் உள்ளது. "காதலன் இழந்த தாபதநிலை"[6] என்று தொல்காப்பியர் நூற்பாச் செய்துள்ளார்.

## பெருந்திணைக் குறுங்கலி :

நச்சினார்க்கினியர் கூறியது போன்று புறநானூற்றுப் பாடல்கள் ஒருதலைக் காதலாகிய குறுங்கலி சார்ந்தவை அல்ல. பாடல்களின் பொருள் அவ்வாறு அமையவில்லை. அவை பெருந்திணை சான்ற குறுங்கலித்துறைப் பாடல்கள் ஆகும். உ.வே.சா. "தாபதநிலை" என்று இரண்டாவது துறை வகுத்துக் காட்டியதும் பொருத்தமுடையதாகாது. மூலநூலாசிரியர் வாழ்ந்த காலத்திற்குப் பின்னர் அதுவும் சற்றொப்ப ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னர் வாழ்ந்த உரையாசிரியர் சொல்லிய

விளக்கம் மறுவாசிப்புக்கு உரியது. அதே போன்று 3000 ஆண்டுக்கு முன் தோன்றிய புறநானூற்றுக்குச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பதிப்பாசிரியர் தமிழ்த் தாத்தா காட்டிய துறையமைதியையும் ஏற்க இயலவில்லை.

**பரிசு–கண்ணகியை ஏற்றுக் கொள் :**

ஓர் அரசனுடைய குடும்பச் சிக்கலில் அவனுடைய இசைவின்றியே உரிமையோடு தலையிட்டு வாயில்கள் போலச் சந்து செய்விக்க முயன்ற புலவர்களின் உள்ளம் உயர்ந்தது. பேகன் அவன் மனைவி கண்ணகியைப் பிரிந்திருந்த காரணம் பாடல்களில் சொல்லப் பெறவில்லை. பேகன் செய்த தவறா? அவன் மனைவி செய்த தவறா? அவன் அவளிடம் கண்ட வேறு குறையா? என்ற வினாக்களுக்குப் பாடல்களில் குறிப்புக் காணப் பெறவில்லை. பேகன் தன் மனைவியை விலக்கிவிட்டு–துறந்துவிட்டு நல்லூரில் இருந்த மற்றொரு அழகிய பெண்ணோடு வாழ்ந்தான் என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. புலவர்கள் பேகனிடம் பரிசுப்பொருள் கேட்டுச் சென்று பாடவில்லை. அல்லது அவனுடைய வீரத்தையும் புகழையும் ஆளுமையினையும் பாடுவது அவர்களுடைய நோக்கமாக இருக்கவில்லை. மேலும் அந்தப் புலவர்கள் தனித்தனியே சென்று வேண்டினார்களா? ஒரே குழுவாகச் சென்று வேண்டினார்களா? என்று தெரியவில்லை. எனினும் ஒருவர் மாறி ஒருவர் ஒரே அறிவுரையை மொழிந்துள்ளனர். அவர்களுடைய அறிவுரையைக் கேட்ட பேகன், அவன் மனைவி கண்ணகியை ஏற்றுக் கொண்டானா? என்ற தகவலும் பாடல்களில் பதிவாகவில்லை. பேகன் திருமணம் செய்து கொண்ட மனைவியோடு இல்லறம் நடத்துவதே சிறந்த விழுமியமாகும் என்ற கருத்து அப்பாடல்களின் உயிர்நாடியாக விளங்குகின்றது.

**பாடினோர் :**

புரவலனுக்கும் புலவர்களுக்குமிடையே நிலவிய உறவும், புரவலனுடைய குடும்ப உறவும் ஆழமாகச் சித்திரிக்கப்பட்டுள்ள பாடல்களின் பொருளைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

143–ஆம் பாடலைப் பாடியவர் கபிலர்

144–ஆம் பாடலைப் பாடியவர் பரணர்

145–ஆம் பாடலைப் பாடியவர் பரணர்/வன்பரணர்

146–ஆம் பாடலைப் பாடியவர் அரிசில்கிழார்

147–ஆம் பாடலைப் பாடியவர் பெருங்குன்றூர்கிழார்

பரணரும் வன்பரணரும் வேறு வேறு என்பார் உ.வே.சா., பேகனுடைய மலைநிலத்தில் வாழ்ந்த குறவர் இனமக்கள் மழைவேண்டி

வழிபட்டால் மழைபொழியுமாம். மழை போதும் என்று வேண்டினால் மழை நின்றுவிடுமாம். அந்த மலையை வாழ்த்திப் பாடிச் சென்ற பசியால் வாடிய கபிலர், ஒருவீட்டின் முன் நின்றார். அவருடைய பாட்டைக் கேட்டு அந்த வீட்டிலிருந்து ஒரு பெண் கண்ணீர் வடிய வெளியே வந்து நின்றாள். விம்மி அழுதாள். அவள் மீது பேகன் இரக்கம் காட்ட வேண்டும் என்பது கபிலர் பாட்டின் பொருள் (143).

இந்தப் பாட்டில் அந்தப் பெண்தான் பேகனின் மனைவி என்ற குறிப்புக் காணப் பெறவில்லை. வாசிக்கின்ற நாம் தான் அவள் பேகனால் தள்ளி வைக்கப்பட்ட அவன் மனைவி கண்ணகி என்ற செய்தியை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் அந்தப் பெண்ணோடு கபிலர் எதுவும் பேசவில்லை.

பரணர் சீறியாழ் மீட்டிய வண்ணம் இரங்கற்பண் பாடிக் கொண்டு காட்டு வழியே சென்றார். அங்கொரு பெண் இடைவிடாது அழுது கொண்டிருப்பதைக் கண்டார். "இளையவளே! எமது நட்புறவை விரும்புவோனாகிய பேகனுக்கு நீ உறவினளோ?" என்று வினவினார். அவள், "நான் அவருக்கு உறவினள் அல்லள்! ஆனால் அவர் எம்மைப் போலும் வேறு ஒருத்தியினுடைய அழகைக் காதலித்து முல்லைவேலி அமைந்த நல்லூருக்குப் போய் வருவார் என்று பலரும் சொல்லுவார்கள்" என்றாள். புலவருக்குப் புரிந்துவிட்டது. பேகனிடம் சென்று "பேகனே! நீ அழுகின்ற அந்தப் பெண்ணுக்கு அருள் செய்வாயாக" என்று வேண்டினார். முந்தைய பாடலில் உரையாடல் இல்லை. இந்தப் பாட்டில் உரையாடல் இடம் பெறுகின்றது (144). தன் கணவன் மற்றொருத்தியின் அழகை மட்டும் நாடிச் சென்றானே தவிர அவளுடைய உள்ளத்தை அறிந்தானில்லை என்பது கண்ணகியின் காதல் உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. இப்பாடலைப் பாணரின் கூற்றாக, இலக்கிய உத்தி அமைத்துப் பொருள் காண்பார் உளர்.[8]

அடுத்துவரும் பாட்டு (145) புலவரின் அன்புக் கட்டளையாகவே தோன்றுகின்றது. "இன்றிரவே நீ உன்னுடைய தேரில் ஏறிப்போய்க் கண்ணகியின் பிரிவு நோயைத் தீர்க்க வேண்டும். அதுவே நீ செய்ய வேண்டிய அறம் ஆகும்" என்கின்றார்.

அரிசில்கிழார், "மயிலின் தோகை போன்ற கூந்தலையுடைய கண்ணகிக்கு மலர்சூட்டி மகிழ உடனே குதிரைகளைத் தேரில்பூட்டு" என்று விரைவு படுத்துகின்றார். (146)

பெருங்குன்றூர்கிழார் ஒருபடி மேற்சென்று, 'பேகனே! நீ இன்றே என்னோடு வருவாயாக! கண்ணகியோடு உன்னைக் கூட்டு விக்கிறேன்'

என்று ஆர்வமுடன் செயல்பட முனைகின்றார் (147). அந்த ஆவியர் கோமானைப் பாடிய எல்லாப் புலவர்களும் பரிசிலாக வேறெந்தப் பொருளையும் வேண்டவில்லை. பேகன் அவனுடைய மனைவி கண்ணகியோடு சேர்ந்து வாழுதலே அவர்கள் வேண்டிய பரிசிலாக இருந்தது. அதனால் இந்தப் பாடல்களைப் பரிசில் துறையில் வைக்கவில்லை.

## தொடர் நிகழ்ச்சி :

மேலே காட்டிய 5 பாடல்களும் ஒரே நிகழ்ச்சியின் வளர்ச்சி நிலைகளைப் பேசுகின்றன. கபிலர் கண்ணகியைக் கண்ட காட்சியையும் அவளுடைய சோகத்தையும் சொன்னார். பரணர், கண்ணகியோடு பேசி, பேகன் இன்னார் வீட்டுக்குப் போகிறான் என்ற உண்மையை அறிந்து கொண்டு, பேகன் அன்று இரவே புறப்பட்டுப் போய்க் கண்ணகிக்கு அருள்புரிய வேண்டும் என்றும் அரிசில்கிழார் பேகனைப் பார்த்துத் தேரைப்பூட்டு என்றார். பெருங்குன்றூர்கிழார் தாமே பேகனை அழைத்துப் போக அணியமாய் இருப்பதாகக் கூறினார். 5 பாடல்களையும் சேர்த்து வைத்துப் படித்தால் அது ஒரு தொடர்கதை போலத் தோன்றும். புறநானூற்றின் தொகுப்பாசிரியன் புலமையும் வல்லாண்மையும் மிக்கவன்; பாராட்டுக்குரியவன்.

## அகமாகுமா?

இந்தப் பாடல்களுக்கு வையாவிக்கோப் பெரும்பேகன் என்ற தலைப்பும் பாட்டின் கீழே திணை, துறைக்கு அடுத்து வையாவிக்கோப் பெரும்பேகனை அவனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாகக் கபிலர்/பரணர்/அரிசில்கிழார்/பெருங்குன்றூர்கிழார் பாடியது என்ற குறிப்பும் இல்லையானால் இந்தப் பாடல்களை அகத்திணைக் கற்பியல் பாடல்களாகவே முடிவு செய்யலாம். காமக் கிழத்தியின்பால் சென்ற தலைவன், அவனை நினைந்து அழுத தலைவி என்ற அளவில் இந்தப் பாடல்கள் அகத்திணைப் பாடல்களாகவே வைத்து எண்ணத்தக்கன.

## அகமாகாது :

ஆயினும் "ஈகைக் கடுமான் பேக!" (143), "வாங்கு புகழ்ப் பேகன்" (144) "கெடா நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக!" (145), "அடுபோர்ப் பேக!" (146) என்று வருந்தொடர்கள் 'சுட்டி ஒருவர் பெயர்'

சொல்லப்பட்ட விதியுள் அடங்கிவிட்டன. எனவே இந்தப் பாடல்களைப் புறத்திணையுள் பகுத்து வைத்திருப்பதே பொருத்தமாகும். இவற்றைப் பாடிய புலவர்கள் ஒருவகையில் கற்பியலில் வரும் வாயிலோர் போல்வர். தலைவன், தலைவி ஆகிய இருவரின் மகிழ்ச்சியே வாயிலோரின் குறிக்கோளாகும். இதனை,

*"எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்*
*புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப"* [9]

என்கின்றது தொல்காப்பியம். வாயிலாக வருவோர் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என்றும் கூறுகின்றது.[10] இந்தப் பட்டியலில் புலவர் இடம் பெறவில்லை என்றாலும் நட்பு நிலையில் வாயிலாக அமைந்த புலவர், புரவலனை அவனுடைய துணைவியோடு சேர்த்து வைக்க முனைந்தார் எனலாம்.

**நிறைவுரை :**

1. நல்லிசைப் புலவர்களின் ஒரே குறிக்கோள் மன்னர்களின் புகழ், வீரம், ஈகைப்பண்பு, கருணை ஆகியவற்றை பாடிப் பரிசுகள் பெற்றுப் பசியாற்றிக் கொள்ளுவது மட்டும் அல்ல. அவர்கள் மன்னர்களின் நலன்நாடிகள். தங்களை ஆதரிக்கும் புரவலர்கள் தம் வாழ்க்கைத் துணையோடு இன்புற்று இல்லறம் நடத்த வேண்டும் என்று விழைந்தனர். இந்த விழுமியத்தைக் குறுங்கலித்துறை சான்ற புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன.

2. புறநானூற்றுக் குறுங்கலிப்பாட்டுக்கள் ஒரே நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக, வளர்ச்சியாக அமைந்துள்ள சிறப்புக்கு உரியவை.

3. புலவர்கள் வெவ்வேறு சமயத்தில் கண்ணகியைக் கண்டு மனம் இரங்கி தனித்தனியே பேகனைக் கண்டு அவனிடம் வேண்டுதல் விடுத்திருக்க வேண்டும். அன்றி, ஒரே குழுவாகச் சென்று வேண்டுதல் விடுத்தார்கள் என்பதற்கான குறிப்பு பாடல்களில் தென்படவில்லை.

4. புலவர்கள் அறவுரை கேட்ட பேகன் மனம் மாறிக் கண்ணகியை ஏற்றுக் கொண்டானா? என்பது புதிராகவே உள்ளது. கற்போர் மனத்தை என்னவோ செய்கின்றது.

## அடிக்குறிப்புகள் :

1. பு.வெ.342.
2. புறநா.143–147
3. தொல்.நூற்.870 (ச.வே.சுப்பிரமணியன் தெளிவுரை).
4. தொல்.பொருள்.நூற்.90 நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டு.
5. புறநா.143 திணை, துறைப்பகுப்பு.
6. தொல்.நூற்.1025 (மு.நூ.)
7. புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா. (பதி.ஆ.) 3–ஆம் பதிப்பின் முகவுரை, பக்.47,56.
8. புறநானூறு மூலமும் உரையும், வ.குருநாதன், வடிவேல் பதிப்பகம், தஞ்சை (2003) முன்செம்பாகம்.பக்.258–259.
9. தொல்.நூற்.1124 (மு.நூ).
10. மேலது. நூற்.1139 (மு.நூ.)

## பாண்டித்துரைத் தேவரும் சேதுபதி மன்னரும்

ஒருநாள் பாண்டித்துரைத் தேவர் சேதுபதி மன்னரைப் பார்க்கப் போயிருந்தார். மன்னரிடம் பேசிக் கொண்டிருந்து புறப்படும் போது பாசுகர சேதுபதி பாண்டித்துரைத் தேவரைப் பார்த்து, "சாமி, கொஞ்சம் இருங்கள் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும்" என்று சொன்னார். பாண்டித்துரைத் தேவரைச் சாமி என்று அழைப்பது வழக்கம். எல்லோரும் போனபிறகு மகாராஜா ஒரு கருத்தைச் சொன்னார். அது கேட்டு மிகவும் மகிழ்ந்து, "அது மிகவும் பொருத்தமானது" என்று பாண்டித்துரைத் தேவர் சொல்லிவிட்டுத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. இருந்த விடுதிக்கு வந்தார்.

உ.வே.சா.விடம் தங்கள் தமிழ்ப்பதிப்புப் பணிக்கு ஒரு கிராமத்தையே தங்கள் பெயரில் எழுதிவைக்க மகாராஜா நினைக்கிறார் என்றார். பாண்டித்துரைத் தேவர் பாசுகர சேதுபதி அவர்கள் உ.வே.சா.வின் தமிழ்ப்பணிக்கு உதவியாக ஒரு கிராமத்தையே மானியமாக வழங்க விரும்பிய செய்தியை இரகசியமாக வைத்துக் கொண்டு ஐயரது சம்மதத்தைப் பெற்று எனக்கும் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார். மன்னர் தாம் செய்ய இருக்கும் தமிழ்ப்பணி சார்ந்த எதையும் பாண்டித்துரைத் தேவரிடம் தெரிவித்து அவர் மூலமாகவே செய்ய விரும்பியது இங்குக் கவனிக்கத்தக்கது. தமிழ்த் தாத்தா தமிழ்ப் பணிக்கு பொருள் இடையூறு பயக்கும் என்று அதனை ஏற்கவில்லை.

# தொல்காப்பியருக்குப் பரத்தமை உடன்பாடன்று

தமிழாகரர் தெ.முருகசாமி
(மேனாள் முதல்வர் இராமசாமி
தமிழ்க் கல்லூரி, காரைக்குடி)
புதுச்சேரி–9

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரப் பிரிவுடையது தொல்காப்பியம். மொழிக்கு எழுத்தும் சொல்லும் அவை உணர்த்தும் பொருளும் இன்றியமையாதன.

ஈண்டுப் பொருள் என்றது பொதுவான ஒன்றைச் சுட்டிக் காட்டும் பருப் பொருளை மட்டும் சுட்டாமல் வாழ்வின் தரத்தை உணர்த்தும் பொருட்புலப்பாட்டுத் தன்மையைச் சுட்டுவதாகும்.

அதாவது வாழ்க்கைக்குப் பொருள் தேவையாயினும் வாழும் வாழ்க்கையும் பொருளுடையதாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் கூறப்பட்டதே தொல்காப்பியப் பொருளதிகாரமாகும். இந்த அடிப்படையில் மனித உயிரினத்திற்கு மட்டுமே உள்ள ஒழுக்கப் பண்பைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் மிகுதியும் பேசும்.

பொருள் வரையறையை முதல், கரு, உரி என்ற குறியீடுகளால் உணர்த்தும் நிலையில் வாழ்வதற்கான இடமும், காலமும் பற்றிய சூழலை முதற்பொருள் என்றும் அவ்விரண்டாலும் உருவாகும் பல்வகைப்பொருள் பற்றிய சூழலைக் கருப்பொருள் என்றும் ஓரறிவு முதல் ஆறறிவுடைய மனிதன் ஈறான உயிரினங்கட்குரியதாக இரண்டும் (முதல், கரு) கூறப்பட்டன.

உயிரினங்களுள் மனித உயிர் மேம்பட்டதாதலின் அதற்கான ஒழுகலாற்றை உரிப்பொருள் என்பதாக வரையறுத்தார் தொல்காப்பியர். இவ்வொழுகலாற்றைத்தான் காதல் இன்பத்தைத் துய்ப்பதற்கான வழிமுறையாகக் கூறுவார்.

தாம் விரும்பியாங்கு வாழும் விலங்கினம் போலில்லாமல் மனிதன் ஓர் வரையறைக்குள் வாழும் நிலையில் ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என நாகரிகத்தைக் கடைப்பிடிப்பவன் என்ற கருத்தே தமிழ்ச் சமுதாயத்தை அடையாளப்படுத்தும் உன்னதமாகும். இக்கருத்தின் உண்மைப் பதிவைத் தொல்காப்பியங் கொண்டு ஆய்வதே இக்கட்டுரையின் கருதுகோள்.

ஆண், பெண் கூடி வாழும் இல்லறத்தில் அவ்விருவரும் தாமாகச் சேர்ந்தோ பிறரால் சேர்த்து வைக்கப்பட்டோ வாழும் சூழலில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற நியதி பிறழாமல் வாழ வேண்டும். ஒரோ வழி பிறழ்ச்சி நேரின் இல்லறம் பாழ்பட்டுவிடும்.

பிறன் மனை விரும்பல், பரத்தை நாடல் என்பன ஆடவனால் ஏற்படும் பிறழ்ச்சிகள். அவ்வாறே காமம் மிக்க உணர்வால் மேற்கொள்ளும் கற்பு இறக்கச் செயல்கள் பெண்டிரால் ஏற்படும் பிறழ்ச்சிகள். இங்ஙனம் இருவரால் ஏற்படும் ஒரோ வழியான பிறழ் ஒழுக்கம் பற்றி இலக்கண இலக்கிய உணர்வாளர்கள் உணர்ந்தாலும் பெரும்பாலும் ஆடவனின் பரத்தமை பற்றியே குறித்தனர் என்பதால் பரத்தமை ஒழுகலாற்றாலேயே ஒட்டு மொத்தத் தமிழ்ச் சமுதாயமும் குற்றப்பட்டதாகக் கருதும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இஃது சரியன்று என்பதை நிறுவத் தொல்காப்பியமே சான்றாம் என்க!

தொல்காப்பியர் அகத்திணையியலில் ஓதல், பகை, தூது, காவல், பொருள் என்ற ஐந்திணை காரணமாகக் கற்பு வாழ்வில் பிரிவு நிகழும் என்றார். இவ்வரிசையில் பரத்தை பிரிவைச் சேர்க்கவில்லை. ஆனால் கற்பியலில் கூறுகிறார்.

அக வாழ்விற்கான அடிப்படை இலக்கணத்தை உணர்த்துவது அகத்திணையியல். இது பற்றிய விரிவுகளைப் பின்னர் களவு, கற்பு, பொருளியல்களில் கூறுகிறார். இந்நிலையில் பிரிவு பற்றிய பட்டியலில் சேர்த்துக் கூறாதவர் கற்பியலில் கூறுவானேன்? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

மனித வாழ்வு புனிதமாக இப்படி இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் பாங்கில் புனிதமான பல பிரிவுகளுடன் புனிதமில்லாத பரத்தை பிரிவைக் கூறுவதைத் தவிர்த்தார் எனலாம். ஆனால் விலக்கப்பட வேண்டிய பரத்தமையைக் கற்பியலில் கூறியதாவது, "சமூகம் இப்படி இருக்கிறது" என்பதைக் காலத்தின் கண்ணாடியாகக் காட்டவே சுட்டினார் எனலாம். ஓர் எழுத்தாளர் என்ற உரிமையில் சமூக வாழ்வின் எல்லாக் கூறுகளையும் தெரிவித்தல் என்ற கடமையில்தான் தொல்காப்பியர் கற்பியலில் பரத்தை பற்றிக் கூறினார் என்க!

எதை எதை, எப்படி எப்படி உணர்த்த வேண்டுமோ, அதை அதை, அப்படி அப்படியாக உணர்த்தினார் என நோக்கரிய நோக்கால் உணர்ந்து தெளிதலே பகுத்தறிவாம் என்பதால் மனித வாழ்வின் புனிதத்தை நோக்கி ஓரிடத்தில் கூறாதும் சமூகத்தை நோக்க சமூகம் இப்படி இருந்தது என உணர்த்த மற்றோரிடத்திலும் கூறியும் ஓர் எழுத்தாளரின் கடமையில் வழுவாது நின்று கூறினார் எனலாம்.

இந்த வகையால் தான் தொல்காப்பியர் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற தமிழ்நெறிய பண்பை இலக்கணமாக்கினார் எனக் கூறலாம். இக்கருத்தையே "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" – என்ற களவியலின் தொடரால் (நூற்பா.2) பிரகடனப்படுத்தினார். இதில் உள்ள ஒத்த என்ற சொல் ஒருவனுக்கும் ஒருத்திக்குமான சம உரிமையைச் சுட்டுவதாக உள்ளது. இச்சமன்பாட்டைத் தொல்காப்பியர் மெய்ப் பாட்டியலில் உடன்பாடாகக் கூறுவதாலும் எதிர்மறையாகக் கூறவதாலும் உணரலாம்.

*"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு*
*உருவு நிறுத்த காம வாயில்*
*நிறையே அருளே உணர்வொடு திருவென*
*முறையுறக் கிளந்த ஒப்பு"* – (மெய்ப்.25)

உடன்பாடான இப்பத்துப் பொருத்தங்களைப் போலப் பொருத்தமில்லாத 12 எதிர்மறைக் குணங்கள் இருக்கக் கூடாதெனக் கூறுகிறார்.

*"நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி*
*வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,*
*இன்புறல், ஏழைமை, மறப்பொடு, ஒப்புமை*
*என்றிவை இன்மை என்மனார்"* -(மெய்ப்.26)

நிம்பிரி (பொறாமை) போன்ற பன்னிரண்டில் இறுதியாகக் கூறிய ஒப்புமை என்பது மிக மிகக் கொடுமையானதாகும்.

கணவன் மனைவியைப் பிற மகளிரொடு ஒப்பிட்டுணர்தலும் மனைவி கணவனைப் பிற ஆடவரொடு ஒப்பிட்டுணர்தலுமான பொருத்தமில்லாத குணமே சீரிய வாழ்வைச் சீரழித்துவிடும். ஆக பொருத்தமும் பொருத்தமில்லாததுமான குணங்களை உணர்ந்து வாழ்தலால் ஒத்த இருவரின் வாழ்வில் எந்தக் குறுக்கீடும் இராது என்பது தொல்காப்பியரின் கணிப்பு. இங்ஙனம் குறுக்கீடில்லாத வாழ்க்கைக்குரியவர்களே ஒருவனுக்கு ஒருத்தியும் ஒருத்திக்கு ஒருவனுமாகிய தம்பதியர் ஆம்!

இங்ஙனம் குறுக்கீடில்லாத அதாவது பிறழ்ச்சி ஒழுக்கக் குறுக்கீடில்லாத ஒத்த வாழ்வைத் தலைவனும் தலைவியும் களவுக் காலத்திலும் கற்புக்காலத்தின் பிரிவின் போதும் கற்றுத் தேர்ந்தனர் என்பதைத் தொல்காப்பியர் இலக்கணமாக உணர்த்துகிறார்.

ஒருவனும் ஒருத்தியும் இயற்கையாய்ச் சந்தித்து வாழும் களவு நிலையில் திருமணவாழ்வு நேர்சீராக அமைதல் உண்டு. ஒரோவழி அமையாத சூழலில் அறத்தொடு நிற்றல் என்ற முறையால் திருமணம் கூடும். களவு நிலையில் ஒத்த மனநிலை உடையவராய் வாழ்வர்.

இங்ஙனம் அறத்தொடு நிலை, அமையாத பாங்கில் ஒருமித்த மனநிலையில் உடன்போக்கை இருவரும் மேற்கொள்ளும் போது கண்டோரால், சான்றோரால் பெற்றோர்க்கும் அறிவுறுத்தப்பட்ட நிலையில் காதலித்த இருவரையும் ஒன்று சேர்த்து வைக்கத் திருமணம் நடைபெறும். இங்ஙனம் அறத்தொடு நிலையாலோ உடன் போக்காலோ நிறைவேறும் திருமண நிகழ்வில்–அவள் அவனுக்காக, அவன் அவளுக்காக உணர்ந்து வாழ்ந்த ஒத்த மனநிலை உணரப்படுவதால் அந்தப் பழக்கத்தின் தொடர்ச்சியே வாழும் கற்பு வாழ்க்கையிலும் மிளிரும் என்பது முறையான குறிப்பாகும்.

இவ்வாறு களவில் பெற்ற ஒத்த மனநிலையின் வளர்ச்சி, கற்புக் காலப் பிரிவிலும் தொடர்வதைத் தொல்காப்பியர் அகத்திணையியலில் தலைவனது கூற்றாக நிகழும் இடம் பற்றிக் கூறும் நூற்பாவில் (40) கீழ்க் கண்டவாறு பதிவு செய்கிறார்.

*"நாளது சின்மையும் இளமையது அருமையும்*
*தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்*
*இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்*
*அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்*
*ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்"*

இன்பம் துய்க்க வேண்டிய இளமைக் காலத்தில் பிரிவு மேற்கொள்ளல் இயலாதென்பதால் அப்போது உண்மை தடுமாறும். அதுவும் மாறி மாறித் தடுமாறும் என்கிறார் தொல்காப்பியர். முடிவாக ஒன்றை இழந்தால் தானே மற்றொன்றைப் பெறமுடியும் என்ற பொது நியதியில் இன்பம் துய்ப்பத்தைத் தள்ளி வைத்துப் பிரிவுத் துன்பத்தை ஏற்கும் மனநிலையில் தலைவியின் துன்பத்தையும் தங்கியே ஏற்கும் மனக்கலக்கத்தோடு பொருள்தேடப் பிரியும் ஆணின் துணிவுக்கு ஈடு இணை இல்லை எனலாம்.

ஏனெனில் வெறும் உடல் இன்பத்திற்காக மட்டும் வாழ்க்கையன்று, இதனினும் பொருளுடைய மேலான வாழ்க்கையே வாழ்க்கை என எண்ணித் துணிந்த துணிவே பொருட் பிரிவின் போது கொண்ட முடிவாம் என்பதையே தொல்காப்பியர், ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்றார்.

இத்தொடர் இருபொருளுடையது. பொருள் இரு நிலையில்லாதது தான் என்றாலும் நடுவணது எய்த இரு தலையும் (அறம், இன்பம்) எய்தும் என்ற ஆன்றோர் அறிவுறுத்திய கோட்பாட்டின்படிப் பொருளுக்குப் பிரியத் துணிந்தான் தலைவன் என்பது ஒரு கருத்து.

அடுத்தது, மாறி மாறிப் பிரிவதா? வேண்டாமா? பிரிந்தால் வரும் துன்பமும் பிரியாவிட்டால் வரும் துன்பம் ஆகியவற்றையெல்லாம் முடிவு செய்யமுடியாத அதாவது ஒன்றி உணர முடியாத தடுமாற்ற முடிவில் பொருளுக்குப் பிரிதல் என்ற முடிவில் தலைவன் பிரிவதாகும். இப்பகுத்தறிவான முடிவு தான்தோன்றி மறையும் சிற்றின்பத்திற்காக வாழ்தல் வாழ்க்கையன்று என்று உறுதிப்படுத்திய ஆவணச் சாசன வாசகமாகவே தமிழர் தம் உயரிய ஒழுக்கப் பண்பை, "ஒன்றாப் பொருள் வயின் ஊக்கிய பாலினும்" என்ற முத்திரை வாசகமாக்கினார் தொல்காப்பியர். ஆக எந்தப் பிரிவாயினும் தலைவனும் தலைவியும் புரிதல் உணர்வில் பிரிதலைப் பெரிதாகக் கருதாது செயல்பட்ட மாண்பே தமிழரின் பண்பைப் பறை சாற்ற உதவியதாம் எனலாம்.

எனவே மனக் கட்டுப்பாட்டுடன் தலைவன் பிரியும் போது தலைவியும் மனம் ஒத்த உணர்வில் இளமை இன்பத்தைத் தள்ளி வைத்துத் தலைவனுக்கு உதவ முன் வருவதால்தான் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற சம உரிமையில் ஒத்த கிழவனும் கிழத்தியுமாய் உள்ளனர் என்ற வாழ்வியல் முறையை இலக்கணப்படுத்தினார் தொல்காப்பியர் எனலாம்.

இங்ஙனம் ஒருவர்க்கொருவர் இன்பத்தை அனுபவிக்க விட்டுக் கொடுக்கும் சமநிலைப் பண்பால் உருவான தூய கற்பு வாழ்வில் பிற ஒழுக்கச் சறுக்கல் ஏற்படாதென்பதே தொல்காப்பியர் கருத்தாகத் தெரிவதால் பழிப்பிற்கரிய பரத்தை பிரிவு பற்றிய துளிர்ப்பை, பிரிவுப் பட்டியலில் கூறத் தவிர்த்தார் எனத் துல்லியமாக உணரலாம்.

இத்தகைய குறுக்கீடில்லாத சமநிலை வாழ்வு தான் சிறந்தது என்பதாக வாழ்க்கை பற்றிய சீரிய முடிவுரையைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

*"காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"* (கற்பி.51)

இறந்ததன் பயன் எனக் குறிப்பிடுவது யாதெனில் வாழ்ந்து முடிந்த தன் இறுதிப் பயன் அதாவது வாழ்க்கையின் சாரம் என்பது கருத்து. களவியலில் ஒத்த கிழவனும் கிழத்தியும் எனத் தொடங்கிய தொடக்கத்திற்கேற்பவே முடிப்பிலும் கிழவனும் கிழத்தியும் என்றது முன்பு கூறிய ஒத்த என்றதன் சொற்பொருட்கான குறிப்பாம் என்க!

ஆக, ஒத்து வாழும் நேரிய சீரிய வாழ்வில் புறம் போகிய நிலையில் தடுமாறி வாழும் ஒழுக்கக் குறியீடு தலைவனுக்கும் தலைவிக்கும் அமையாதென்ற பொதுமையைத் தெளிவாக உணர்த்துவதால் பலரும் பரப்பும் பரப்புரையான பரத்தமை குறிப்பு ஆடவனுக்குத் தவிர்க்கப்படும் நிலையிலேயே எச்சரிக்கையாகத் தொல்காப்பியர் பகுத்துணர்வோடு தமிழரின் சீரிய வாழ்வை இலக்கணச் சொற்றொடர்களால் உலகிற்குப் பறை சாற்றினார் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை என உறுதிப்படுத்தலாம்.

ஆனாலும் சில இயல்களில் பரத்தமை பற்றி விரிவாகப் பேசப்படுவதென்பது சமூகத்தின் நிலையை மறைக்காமல் சமூகம் இப்படி இருந்தது என்றதன் பதிவாக ஓர் எழுத்தாளனுக்குள்ள கடமையாகக் கூறியதாய்ப் புறந்தள்ளி உணர வேண்டும். இங்ஙனம் நோக்கரிய நோக்காய்த் தொல்காப்பியத்தை உணர்ந்தால் தொல்காப்பியத்தின் ஆன்மாவைப் புரிந்து கொள்ள முடியும். இல்லையேல் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற குறைக்கே இடங் கொடுத்துப் பேசுவதும் எழுதுவதுமாக அமையும்.

இக்கருத்தை மேலும் ஓர் உலகியல் உண்மையால் உறுதிப் படுத்தலாம். அதாவது பரவலாகப் பேசப்படுவதாலேயே அக்கருத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை.

எடுத்துக்காட்டாக "அல்ல" என்ற பன்மையைக் குறிக்கும் சொல்லை அறிந்தோர் அறியாதோர் ஆகிய அனைவரும் ஒருமைக்குரியதாய்ப் பேசியும் எழுதியும் வருவதர்லேயே அச்சொல் ஒருமையாகாது. அது பன்மையே என்ற ஒப்பற்ற உண்மைபோல இப்பரத்தமை பற்றியதைப் பகுத்துணர்ந்து குணம் நாடிக் குற்றமும் நாடியே மேற்கொள்ள வேண்டும். எனவே ஒரோவழிக் கெட்டுப் போகின்றவர்களைக் கொண்டு ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்தைப் பரத்தை உணர்வுடையதாகக் கூறல் பகுத்தறிவுக்கு ஒவ்வாமையாம் என்க. அங்ஙனம் கூறுவதில் மகிழ்ச்சி காண விழைவோர் மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்ற மொழிக்கே இலக்காவர்.

இதன் நுட்பத்தைத் துல்லியமாக உணர்ந்ததால்தான் தொல்காப்பியரின் கருத்தை வழி மொழிதலாகவே காமத்துப்பாலில் பரத்தை ஒழுக்கம் பற்றியதைத் தவிர்த்துக் கற்பனையில் ஊடல் பற்றியதை ஊடுபாவாகக் கருத்தை நெய்தார். இச்சான்றின் வழியாகவும் தொல்காப்பியருக்குப் பரத்தமை உடன்பாடன்று எனக் கூறலாம்.

# சரபோசி மன்னர் வளர்த்த நுண்கலைகள்

முனைவர் **ம.சா.அறிவுடைநம்பி**

தென்னிந்தியாவைப் பொறுத்த அளவில் கலைகளின் வளர்ச்சியில் தஞ்சாவூர் சிறப்பிடத்தைப் பெறுகின்றது. தஞ்சை மராத்திய மன்னர்களுள் இரண்டாம் சரபோசி மன்னர் கி.பி. 1798 முதல் 1832 வரை தஞ்சை அரசுப் பொறுப்பில் இருந்த காலத்தில், பல பழைய கலைகள் புதுமெருகு பெற்றன; பல புதிய கலைகள் தோன்றின. ஓவியம், சிற்பம், இசை, நாடகம், நாட்டியம் முதலான பல்வேறு கலைகள் சிறப்படைந்தன. இவர் காலத்தில் மேல்நாட்டிலிருந்து பல கலைஞர்கள் தஞ்சைக்கு வந்துள்ளனர். எனவே, தஞ்சைக் கலைகளில் மேலைத் தாக்கம் படியத் தொடங்கியதைக் காணமுடிகின்றது. மன்னர் பல்வேறு கலைகளைப் போற்றிப் பாதுகாத்ததோடு கலைஞர்களுக்கும் பேராதரவு நல்கி ஊக்கப்படுத்திக் 'கலைகளின் காவல'னாக விளங்கினார்.

**ஓவியக்கலை :**

சின்னச்சாமி நாயக்கர், செங்கம்மாள், சாரங்கபாணி, முத்துக்கிருட்டிணன், கோவிந்தசாமி, வேங்கடப்பெருமாள், வேங்கட நாராயணப்பையா முதலான பலர் அரண்மனையில் மாத ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டனர். சிறந்த ஓவியர்கள் 'சித்திரம்', 'சித்திரக்காரன்', 'சித்திரக்காரி' என அழைக்கப்பட்டனர்.

மன்னர் காலத்தில் பலப்பல உருவப்படங்கள் வரையப்பட்டதற்கான சான்றுகள் பல்வேறு ஆவணங்களில் காணப்படுகின்றன. கோயில்களில் கடவுளர் திருவுருவப்படங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும், அந்நாளிலிருந்த ஆளுநர்கள் (Governors) ஆட்சியர் (Collectors) முதலானோரின் உருவப்படங்களே மிகுதியாக வரையப்பட்டுள்ளன. தஞ்சை மராத்திய மன்னர்களின் உருவப்படங்களும் வரையப்பட்டுள்ளன. இம் மன்னர்களின் உருவப்படங்கள் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளன.

**அன்பளிப்பு ஓவியங்கள் :**

தம்மைக் காண வந்த ஆங்கிலேய அதிகாரிகளுக்குச் சரபோசி மன்னர் பல்வேறு ஓவியங்களை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். பிளேக்கு, வாலண்டியா பிரபு, பெஞ்சமின் தாரின், சர் தாமசு செவகுத்தி ஆகியோருக்குக் காளை மாடுகள், மீன்கள், பறவைகள், விலங்குகள், எறும்புகள் போன்றவற்றின் ஓவியங்களை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

மேல்நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த பல ஓவியர்களுள் பிளாக்சுமன் என்பவர் எண்ணெய் வண்ணச் சாயத்தில் மேல் நாட்டுப் பாணியில் வரைந்த பல உருவப்படங்களைச் சரபோசி மன்னரிடம் கொடுத்துள்ளார். அதே போன்று பிரெய்லி, வில்வி, வாலண்டன் ஆகியோரிடமிருந்து பல ஓவியங்களை விலை கொடுத்தும் மன்னர் வாங்கியுள்ளார்.

*சுவரோவியம்:–* தஞ்சைப் பெரிய கோயில் அம்மன் கோயில் முன்மண்டப மேல் விதானத்தில் உமையவளின் வீரச்செயல்களை விரித்துக் கூறும் 'தேவி மகாத்துமிய' த்தின் காட்சிகளைப் பல வண்ண ஓவியங்களாக வரையச் செய்துள்ளார். ஒரத்தநாடு, முத்தம்மாள் சத்திரத்தை கி.பி.1920இல் கட்டிய மன்னர் பல்வேறு ஓவியங்களை இச் சத்திரத்தில் வரையச் செய்துள்ளார்.

**துணி ஓவியம் :**

சரபோசி மன்னர் கி.பி.1820–இல் தஞ்சையிலிருந்து சுமார் 3000 பேர்களுடன் காசிக்குத் தலயாத்திரை சென்றுவிட்டு கி.பி.1822–இல் தஞ்சைக்குத் திரும்பியுள்ளார். இவர்களுடன் 'சித்திரக்காரன்' சின்னசாமி நாயக்கனும் உடன் சென்றுள்ளான். மன்னர் காசிப் புனிதப் பயணம் செல்கின்ற காட்சி துணியில் (56.5X75 செ.மீ) வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியத்தின் கீழ் கி.பி. 1825–30 என்ற குறிப்புக் காணப்படுகிறது. எனவே, மன்னர் காசிப்பயணம் சென்று வந்த பின்னர் இவ்வோவியம் வரையப்பட்டிருக்கலாம்.

**காகிதச் சுவடி ஓவியம் :**

சரசுவதி மகால் நூல் நிலையத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள காகிதச்சுவடி நூல்களின் முகப்பு அட்டை, பின்புற அட்டைகளில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சில காகிதச் சுவடிகளில் மராத்திய அரசர்களின் உருவப்படங்கள் தனியாகவும் தீட்டப்பட்டுள்ளன. சில சுவடி நூல்களின் முகப்பு அட்டையில் அந்நூலாசிரியர் அந்நூல் எழுதக் காரணமாக இருந்த அரசர் ஆகியோர் உருவப்படங்களும் வரையப்பட்டுள்ளன. காகிதச் சுவடிகளில் மருத்துவச் செடிகள், பல வகை மீன்கள் முதலானவற்றை மன்னர் வண்ண ஓவியங்களாக வரையச் செய்துள்ளார்.

**சிற்பக்கலை :**

கோயில்கள், அரண்மனை, சத்திரங்கள் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சரபோசி மன்னர் கி.பி. 1799–இல்

ஒப்பந்தம் செய்து கொண்டதற்கேற்ப 102 தேவத்தானங்களைத் தம் நேர் பார்வையில் வைத்துள்ளார்.

இம்மன்னர் காலத்தில் கருங்கல், சலவைக்கல், செங்கல், மரம் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வகைகளில் கடவுளர் திருவுருவங்கள், மனிதர், கலைஞர் போன்றவர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூரிலுள்ள எல்லையம்மன் கோயிலில் சரபோசி மன்னர் கி.பி. 1803–ஆம் ஆண்டு குந்தளாதேவி அம்மன் உருவத்தையும் வீணை வாசிக்கும் நிலையில் மாதங்கியின் உருவத்தையும் சிற்பமாகச் செதுக்கச் செய்துள்ளார்.

சரபோசி மன்னர் தம் அன்புநாயகி முத்தம்மாளின் நினைவாக ஒரத்தநாட்டில் அவள் பெயரில் கி.பி. 1800–இல் ஒரு சத்திரம் கட்டினார். இச்சத்திரத்தின் வெளியில் சுற்றிலும் கருங்கற் சிற்பங்களும் சத்திரத்தின் உள்ளே செங்கற் சிற்பங்களும், மாடியில் மரச்சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

**கருங்கற் சிற்பங்கள் :**

சத்திரத்தின் வெளிப்பகுதியின் மேற்புறத்தில் 50செ.மீ. உயரத்தில் நாட்டிய விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. சிறிய அளவில் இசை, நாட்டியம், நாட்டுப்புறக்கலைகள் தொடர்பான பல்வேறு சிற்பத் தொகுதிகள் தொடர்ச்சியாகச் செதுக்கப்பட்டுள்ளன. நாட்டியம் ஆடுகின்ற குழுவில் நட்டுவர்கள் கைத்தாளமிட்டுப் பாடுகின்றனர்; மத்தளம், புல்லாங்குழல், மகுடி, தாளம், எக்காளம், முரசு முதலியன வாசிக்கும் இசைக்கலைஞர் இசையமைத்துச் செல்கின்றனர். நாட்டிய மகளிர் தலையில் கொண்டை போட்டுள்ளனர். அவர்கள் அணிந்துள்ள சேலைகளில் கோடுகளும் பூக்களும் காணப்படுகின்றன. சலங்கைகள், வளையல்கள் முதலிய பல்வேறு அணிகலன்களையும் அணிந்துள்ளனர். இசைவாணர், நட்டுவர் முதலியோர் ஒரே மாதிரியான தலைப்பாகை அணிந்துள்ளனர்.

பெண்கள் கோலாட்டம் ஆடுதல், பாம்பாட்டி மகுடி ஊதுதல், வீரர் பலர் குதிரைகளில் அமர்ந்து போருக்குச் செல்லுதல், குதிரை மீது அமர்ந்து இளவரசர் இருவர் போரிடுதல், வீரர் துப்பாக்கிகளை ஏந்திச் செல்லுதல், விலங்குகளை வேட்டையாடுதல், யானைகள் அணிவகுத்துச் செல்லுதல் போன்ற பல்வேறு காட்சிகள் சிற்பங்களாகச்

செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிற்பியின் கைவண்ணத்தையும் அழகிய வேலைப்பாட்டுத் திறமையையும் காணலாம். பெண்கள் விசிறி போல் சேலை அணிந்துள்ளனர். சரபோசி மன்னர் காலத்தில் மக்களிடையே நிலவிய பழக்க வழக்கங்கள், பயன்படுத்திய ஆடை, அணிகலன்கள், வீரர் பயன்படுத்திய ஆயுதங்கள் முதலான பலவற்றை இச்சிற்பங்கள் காட்டுகின்றன.

**மரச்சிற்பங்கள் :**

சத்திரத்தின் மாடியில் வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தூண்களில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் வேல்கள், பல வகையான பூச்சாடிகள் போன்றவை உள்ளன.

**சலவைக்கற் சிற்பங்கள் :**

சலவைக்கல்லில் சிற்பம் செதுக்கப்படுவது மேலைநாட்டில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்துள்ளது. இக்கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட மன்னர் இரண்டு சிற்பங்களைச் சலவைக் கல்லில் செதுக்கச் செய்துள்ளார். தஞ்சைக் கலைக்கூடத்தில் கைகூப்பி வணங்கிய நிலையில் இரண்டாம் சரபோசி மன்னரின் முழுஉருவச் சிலையும் சிவகங்கைக் கிறித்தவ தேவாலயத்தில் சுவார்சு பாதிரியாரின் மரணப்படுக்கைக் காட்சியும் சலவைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு சலவைக்கல் சிற்பங்களையும் மேல்நாட்டுச் சிற்பியான பிளாக்சுமன் செய்துள்ளதாக ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**இசைக்கலை :**

அரண்மனையில் இருந்த இசைக் கலைஞர்களில் சிறந்தவர்களை 'வித்தியாதிகாரர்கள்' என்று குறிப்பிட்டுள்ளனர். வராகசுப்பையா இராமசாமி அய்யாவும், சேது அண்ணாசியும் இச் 'சங்கீத வித்தியாதி'ப் பிரிவிற்குக் கண்காணிப்பாளர்களாக கி.பி. 1831இல் இருந்துள்ளனர். இப்பிரிவில் குவாலியரிலிருந்து கலியாண்சிங்கு, திர்தார் அலி, இந்துத்தானிப் பாடகர் இலகாராம், மீர்ரகுமான் போன்ற வேற்று மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் இருந்துள்ளனர்.

பல்லவி கோபாலய்யர், கோபாலகிருட்டிண பாரதியார் ஆனை அய்யா, வீணை பெருமாளையர், இராமசகா போன்ற இசையிற் சிறந்த புலவர்கள் அரசவையில் இருந்துள்ளனர். கீர்த்தனைகள் கும்மிப்பாக்கள் போன்றவை இக்காலத்தில் சிறந்து விளங்கின.

அரண்மனையில் சில இசைக்கலைஞர்கள் மாத ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இந்துத்தானி இசைக்கலைஞர் சீனிவாச வெங்காசி குட்டிபன் மகன் கி.பி. 1802இல் 6 சக்கரம் ஊதியமாகப் பெற்றுள்ளார். சாக்கோபாய் என்னும் இசைக்கலைஞர் கி.பி.1820இல் 4 சக்கரம் ஊதியமாகப் பெற்றுள்ளார்.

துதார் இணை வாத்தியம், சருப்ப காகளா, கிளாரினெட்டு போன்ற பல்வேறு இசைக்கருவிகள் ஐரோப்பாவிலிருந்து விலைக்கு வாங்கப் பட்டுள்ளன.

கதாகாலட்சேபம் இம்மன்னர் காலத்திலேயே சிறப்பாகவும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றும் வளர்ந்துள்ளது. அரண்மனையிலும், பல்வேறு திருவிழாக்களிலும், பண்டிகைக் காலங்களிலும் பல இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதற்கான சான்றுகள், அவற்றுக்குச் செலவு செய்யப்பட்ட விவரங்கள் போன்றவற்றை ஆவணங்களில் காணலாம்.

**நாடகக்கலை :**

இரண்டாம் சரபோசி மன்னர் பல நாடக நூல்களையும் எழுதியுள்ளார். தேவேந்திர குறவஞ்சி, இராதாகிருட்டிண நாடகம், மோகினி மகேசு பரிணயம், கணேச விசயம், மீனாட்சி பரிணயம் போன்ற நாடகங்கள் அவர் எழுதியவையாகும். அரசவைப் புலவராக விளங்கிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் சரபோசி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்னும் இசை நாடக நூலைப் பாடியுள்ளார். இந்நாடகம் மன்னர் முன்னிலையில் கலைஞர்களால் பாடி நடிக்கப்பெற்று அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. அரண்மனையிலிருந்து பாகவத மேளா நாடகக் குழுவில் குப்பையா ஆதிமூர்த்தி, வேங்கடாசலம், விகடகவி வைத்தியநாத லோகநாதன் போன்ற நடிகர்கள் இருந்துள்ளனர். நாடகத்தில் பெண்களும் நடித்துள்ளனர். அரண்மனையில் பண்டிகைக் காலங்களில் நாடகம் நடத்தப்பட்டுள்ளது. நாடகக் கலைஞர் பலர் அரண்மனையில் மாத ஊதியத்திற்குப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**நாட்டியக்கலை :**

சரபோசி மன்னர் மராத்தி மொழியில் நாட்டியம் தொடர்பான நூலொன்றை எழுதியுள்ளார். அவைக்களப் புலவர் முவ்வா நல்லூர் சபாபத்தய்யா என்பவர் பல நாட்டியப் பதங்களைப் பாடியுள்ளார். 'தஞ்சை நால்வர்' என்று போற்றப்படும் பொன்னையா, சின்னையா, சிவானந்தம்,

வடிவேலு ஆகியோர் இம்மன்னர் ஆதரவில் இருந்தவர்களாவர். இச்சகோதரர்கள் பல எண்ணற்ற நாட்டிய வடிவங்களான அலாரிப்பு, சதீசுவரம், சுவரசதி, பதவருணம், சப்தம், தில்லானா, கீர்த்தனைகள் போன்றவற்றை இயற்றியுள்ளனர். இந்நால்வரும் அரசரால் பெரிதும் மதிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பல விருதுகளும், பல்லக்குகளும் மன்னரால் அளிக்கப்பட்டுள்ளன.

சுப்பராய ஓதுவார், சபாபதி, சுப்பையன், பொன்னையா, சின்னையா, வடிவேலு, சிவானந்தம் ஆகியோர் அரசவையில் நட்டுவர்களாக இருந்துள்ளனர். அரண்மனையில் ஆண்களும் பெண்களும் நாட்டியமாடியுள்ளனர். 'சுந்தரி', கேத்தரின் சீமாட்டி, வேங்கடலட்சுமி, செருசு, சோசபு, சோசப்பின் மனைவி, சேபராயின் மனைவி, தாசி காவேரி பெண் பெரியா போன்றோர் அரண்மனையில் நாட்டியமாடியுள்ளனர். இவர்களுள் ஆங்கிலேயர்களும் ஆடியுள்ளதற்கான சான்றுகள் ஆவணங்களில் காணப்படுகின்றன.

இரண்டாம் சரபோசி மன்னர் பல்வேறு கலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து போற்றி வளர்த்துள்ளார். இவர் காலத்தில் மேலைத் தாக்கம் தஞ்சையில் புதியதொரு மரபைத் தோற்றுவித்தது. மேல்நாட்டுப் படங்களில் காணப்படும் திரைகள், தூண்கள் மற்றும் பிற பொருள்களும் தஞ்சை ஓவியங்களிலும் உள்ளன. ஐரோப்பியரின் தாக்கத்தால் சுற்றுப்புறம் குறிப்பிடத்தக்க வகையில் வரையப்பட்டுள்ளது. சலவைக்கல்லில் சிற்பங்களை உருவாக்கியது மேல்நாட்டுத் தாக்கத்தினாலேயாம். கலைகளின் மூலம் அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள் முதலானவற்றை அறியலாம். ஓவியங்களிலும் சிற்பங்களிலும் இடம் பெற்றுள்ள கடவுளர், மனிதர் போன்றோர் உருவங்கள் பருமனாக உள்ளன; மராத்திய மன்னர் அரசு இருக்கையில் அமர்ந்திருப்பது போலத் திண்டுடன் கூடிய இருக்கையில் கடவுளர்களும், அசுரர்களும் அமர்ந்துள்ளனர். தண்ணீர்ச் சாயம், எண்ணெய் வண்ணச் சாயம் ஆகியவற்றில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மன்னர் அரசருக்குரிய நீண்ட அங்கியையும், மார்பில் பல்வேறு அணிகலன்களையும் அணிந்துள்ளார். தலைப்பாகை அலங்கார வேலைப்பாட்டுடன் திகழ்கிறது. ஆண்களில் பலர் பலவிதமான தலைப்பாகை அணிந்துள்ளனர். ஆண்கள் தார்ப்பாய்ச்சு போலக் கட்டும் வழக்கம் காணப்படுகிறது. பெண்கள் விசிறி போல் சேலை அணிந்துள்ளனர். பூ வேலைப்பாடு கொண்ட ஆடைகளை மகளிர் அணிந்துள்ளனர். கீர்த்தனைகள், கும்மிப்பாக்கள், கதாகாலட்சேபம் போன்றவை இம்மன்னர் காலத்திலேயே சிறந்து விளங்கின.

# 'மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி' உருவாக்கம் : செய்முறையும் பயன்பாடுகளும்

முனைவர் **ஆ. பூமிச்செல்வம்,**
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

## தொடக்கமாக :

இன்றைய மானுடம் உலகமயம் எனும் சுழலுக்குள் மறைமுகமாகப் பன்முகச் சூழ்ச்சிகளுடன் சிக்கவைக்கப்பட்டிருக்கிற நிலையில், 'உலகத்தோருக்கேற்ப ஒற்றைத் தன்மை ஆக்கப்படுதல்' எனும் மாயவலை அனைவரையும் நீக்கமறப் பிணைக்கவும் தொடங்கியுள்ளது. இவ்விதச் செயல் நிகழ்வினை மூன்றாமுலக மக்களானோர் 'புதுக்காலனியப்படுதல்' என்றும் கூட அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். நவகாலனியப்படுதல் எனும் இதன் நீட்சியாக, உலக முழுவதுமுள்ள வளர்முக/பின்தங்கிய பிராந்திய மக்களுக்கெனப் பிரத்யேகமாக இருந்த மொழி, பண்பாடு, பழக்க வழக்கம், நம்பிக்கைகள், அன்றாட அலுவல்கள் என்று விரிகிற வழக்காறுகள் பலவும் 'சீரமைப்படுத்தப்படுதல்' என்னும் உராய்வில் உருமாற்றம் பெறவும் வைக்கப்பட்டு வரப்படுகின்றன. இதற்கு முதற்பலி—மண்ணோடும் மகத்தான மரபுகளோடும் நீக்கமறப் பிணைந்திருக்கிற நாட்டுப்புறக் கிராமிய மக்களே. இருப்பினும், தமக்கிழைக்கப்பட்டு வரப்படுகிற இவ்விதங்களிலான சூழ்ச்சிமைகளை இவர்கள் அடையாளந்தெரிந்து கொள்ளாமலும் இல்லை. உலகமயத்தின் ஆதிக்கவர்க்கக் கார்ப்பரேட் கலாச்சாரத்தின் நரித்தனங்களை, பின்காலனிய மனோபாவப் பின்னணியோடு, நடப்புச் சூழலில் வளர்முகத்தார் எதிர்கொள்ளவும் தொடங்கியுள்ளனர் என்பதற்கு, இன்றைய நிலையில் இவர்கள் மேற்கொண்டு வருகிற சில செயற்பாட்டம்சங்களே கட்டியமும் கூறுகின்றன. சமகாலத்தைய வணிகமயச் சூழலில், மிகவும் பின்தள்ளப்பட்டு, கோர நசிவுக்காளாகியுள்ள பல்வேறுபட்ட மானுட இனக்குழுக்களும் 'இனச் சீர்மை, மொழிச் சீர்மைப்படுத்தப்பட்டிருத்தல்' எனும் அதிகார ஆக்கிரமிப்புகளிலிருந்து, விடுபட்டு மீளும் நோக்குடனும், இழந்துபோன தம் பாரம்பரியங்களை மீட்டெடுக்கும் விதமாகவும், தமது நாகரிக, பண்பாட்டு வேர்களைக் கண்டறிந்து பேணிடும் முகமாகவும் விதவிதமான செயற்பாட்டம்சங்களை முன்னெடுத்து, அவற்றுடன் தம்மை நீக்கமற இயைத்துக் கொள்ளவும் தொடங்கியுள்ளன. இவ்விதச் செயற்பாடுகளின்

ஒருவித அம்சம்தான், இந்நாள் வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த "பொதுச்சொல் அகராதி" தயாரித்தல் எனும் செயற்பாட்டிலிருந்து சற்று விலகி, தமக்கே உரித்தான வட்டார வழக்கு மற்றும் அது சார்ந்த பேச்சுச் சொற்கள். கலைச் சொற்களைத் தேடி, அகராதியாக உருவாக்குவதும், இவ்வாறு உருவாக்கியவற்றை அன்றாடச் செயற்பாடுகளோடு இணைத்துப் பயன்படுத்துதல் என்பதுமாகும்.

## தனித்தனிப் பிரதேசங்களுக்கேயுரிய தனித்துவம் பொருந்திய வழக்குச் சொல்லகராதிகள் உருவாக்கத்திற்கான தேவை:

மொழியானது மானுடச் சமூகத்தின் வெற்றுத் தகவல் கருவியாக மட்டுமே தொழிற்பட்டிருந்த காலம் காலாவதியாகியுள்ள நிலையில், மானுட வாழ்வுப் போக்கை குறிப்பாக அதனுடைய மன அமைப்பினை, சமூக உறவுகளை, அதிகார – அரசியல் வீச்சுக்களின் நெருக்கடிகளை, பண்பாட்டு–பழக்கவழக்கப் பதிவுகளைத் தீர்மானிக்கிற/நிர்மாணிக்கவும் செய்கிற, அதிமுக்கிய அம்சமாக சமகால கட்டத்தில் உருமாற்றம் பெற்றுள்ளது. இதனைக் கைக்கொண்டு படைக்கப்படுகிற பனுவல்கள் யாவும், நடப்புக்கால மானுடத்தின் நவநவமான பிரச்சினைப் பாடுகளை, விதவிதமான சிக்கல் சிடுக்குகளுடன் சித்திரித்துத் தரவும் எத்தனப்பட்டிருக்கின்றன. விளைவு, தாம் தோன்றியது முதலே வேறுவேறு பிரதேசங்களில் வாழ நேர்ந்துவிட்ட மானுடம், தமக்கேயான வேறு வேறு பாஷைகளை, தம் சூழல்களிலிருந்து உருவாக்கி வைத்திருந்தமை காரணமாக, தம்மை வெளிப்படுத்திட, முற்றும் முழுதாகப் பிரதிபலித்துக்காட்டிட எனத் தம் மண்ணின் மொழியையே பெரிதும் விரும்பி முன்னெடுக்கத் தொடங்கிற்று. விளைவு : இரத்தமும் சதையுமாக இருந்த வெளிப்பாடுகளனைத்தும், படைப்பு நேர்த்தியில் ஒருவிதப் பூர்ணத்துவத்தை எட்டியே இருப்பினும், அவ்வுழைப்பின் நோக்கம் பிற புலத்தை எட்டாது இடையறுந்தது. இதனைக் கண்ணுற்ற இவர்களால் கண்டெடுக்கப்பட்ட ஊடகம்தான், தமது ஆக்கங்களைத் தம்மோடு பிறரும் விளங்கிக்கொள்ள, "பிரத்யேக மொழி" எனும் சாதனம் ஒன்றை உருவாக்கி, அதன் வழித் திரள்வு பெறுகிற சொல்லாடல்களை நிரல்படுத்திக் கோர்த்து ஒத்திசைத்துக் கொடுத்தல் எனும் செயற்பாடு. இவ்விதச் செய்கைக்கான பெயரிடல்தான் "வட்டார வழக்குச் சொல் அகராதி" எனும் நாமம்.

### வட்டார வழக்குச் சொல்—விளக்கம் :

வட்டார வழக்குச் சொல்லகராதியை உருவாக்கிட முனையும்போது, வழக்குச் சொற்கள் என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஒரு சொல்லானது ஒரே மொழி பேசுவோரிடத்தும்

கூட, ஓரிடத்து ஒரு பொருளும் மற்றோர் இடத்து வேறு ஒரு பொருளும் தந்தும், பொதுமொழியிலிருந்து பொருளளவில் வேறுபட்டும் இருப்பின் அது 'வட்டார வழக்குச் சொல்' எனப்படும். இவற்றை அகர நிரலாக ஆக்கி அமைப்பது தான் வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கல் எனும் செயற்பாட்டம்சம்.

## தமிழகச் சூழலில் வழக்குச் சொல்லகராதிகளின் இடம் :

உலகில் இன்று வாழுகின்ற மானுட இனவகைமைகளும், தொல் பழமையும் வரலாற்று முக்கியத்துவமும் பண்பாட்டுச் செழுமையும் கொண்டிலங்குவனவற்றுள் குறிக்கத்தக்க இடத்தை வகிப்பது தமிழினமேயாகும். மகத்தான பண்பாட்டு விழுமியங்களுள் பலவற்றைத் தன்னகங்கொண்டுள்ள இதனுள், காலந்தோறுமான அன்னியக் கலப்புகளானவை சிறுகச்சிறுகச் சேரத் தொடங்கி, நடப்புச் சூழலில் பிரித்தறியவொண்ணாது பிணைந்து கலந்திருக்கின்றன. விளைவு– தமிழினத்துக்கே உரித்தானதாக இருந்த தனித் தனித் தன்மைகளுள் பல, அசைவுகள் பலவற்றை எதிர்கொண்டு ஸ்தம்பித்திருத்தல் எனும் நிலை, ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின், அதற்கென ஒரு பெரிய போரினை நிகழ்த்தவேண்டுமென்பதில்லை; அவ்வினத்தின் மொழியை அழித்தாலே போதும்; தானாகவே அவ்வினம் காலாவதியாகிவிடும் என்பர். இதற்கேற்ப, தமிழினுள் கலந்த பிறமொழிச் சொற்கள், தமது எதிர்விளைவை நிகழ்த்தத் தொடங்கிட, சுதாரித்துள்ள தமிழினம் தற்போது தமக்கே உரித்தான பிரத்யேகச் சொற்களைத் தேடிக் கோர்க்கத் தொடங்கி இருக்கிறது. இதன் ஒரு பகுதிதான் குமரி, நாஞ்சில், நெல்லை, கரிசல், கொங்கு, நடுநாடு, செட்டிநாடு, புதுவை என்கிற வட்டாரங்களுக்கேயுரிய சொற்களை நிரல்படுத்தி, அகராதியாக அச்சிட்டு, நூலாக்கித் தந்துள்ள செயற்பாடுகள். இதன் நீட்சியாக, விடுபட்ட சில புலங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு, அவ்வப் புலங்களுக்கேயுரிய அகராதிகள் தயாரிக்கும் பணியானது முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் தற்போது, மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரிய ஆய்வாளர்–முனைவர் ஆ.பூமிச்செல்வம் என்பவரால் 'மதுரை வட்டார வழக்குச் சொல் அகராதி'யானது உருவாக்கப்பெற்று வரப்படுதல் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகிறது.

## தமிழக அளவிலான வட்டார வழக்கு அகராதிகள் உருவாக்க முயற்சியில், 'மதுரை வட்டார வழக்கராதி' பெறும் இடம் :

"பாண்டியர்களின் இரண்டாம் தலைநகர் 'மதுரை'; பாண்டிய தேசப் படங்களில் 'மட்ரா' என்று காணப்படுவதும், கிரேக்கர்களால் 'மெதோரா' என்று குறிக்கப்படுவதும், ஆங்கிலத்தில் 'மதுரா' என்று சொல்லப்படுவதும்

இத்தமிழ் மதுரையேயாம்" என்கிற மேலைநாட்டவரான கால்டுவெல்லின் கூற்றினை மேற்கோளாகக் காட்டி, இந்நாள் வரையிலுமாக, மதுரையின் புகழைத் தம்பட்டப்படுத்தி வந்துள்ள நிலையில், இவ்விதப் பெயரிடல்கள் யாவும் மேட்டுக்குடியினரின் மொழியாடல்களாகவே அமைந்து, நிலைபெற்றுக் காணப்பட 'மருத' 'மதுர' என்றழைத்து வரப்பட்ட, சாமானிய மதுரை மக்களின் சொற்பிரயோகங்கள் யாவும் வழக்கொழிக்கப்பட்டு விட்டன. இவ்வித நிலைமையில் தான் மதுரை மக்களின் வழக்காற்றியலையும், வழங்கி வருகிற சொல்லாடல்களையும் பேணிப் பாதுகாத்திட வேண்டிய நிர்பந்தம் எழுந்துள்ளது. இத் தருணத்திலும் கூட, நவீன தொடர்புக்கருவிகள் மற்றும் பொழுதைக் காவு கொள்ளும் சினிமா, வானொலி, தொலைக்காட்சி முதலான சாதனக்காரர்கள் யாவரும், இம்மதுரைசார் வழக்காற்றியலை முன்னெடுத்து, காசாக்குகிற முயற்சிகளை அதிதீவிரமாக மேற்கொண்டு வருகின்ற துர்நிலைமை என்பதும் தொடரவே செய்கிறது. இருப்பினும், இக்கால இலக்கிய வகைமைகளுள், சில, நலிந்து போன மதுரை வாழ் மக்களின் வாழ்நிலையை, இவர்களின் மொழியாடல்கள் மூலமாகவேப் பேசிட முயன்று வருகின்றன என்பதும், இவற்றைப் பிறபுலத்தில் உள்ளோர் தெரிந்து கொள்ளுவதற்காக, மதுரை வட்டார–பேச்சு வழக்குச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கிட, அதிமுயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வரப் படுகின்றது என்பதும் வரவேற்கத்தக்க அம்சங்களாகின்றன. இவ்விதச் சூழலில்தான் 'மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கம்' எனும் செயற்பாடு முக்கியத்துவம் பெறலாகிறது.

### மதுரை வழக்குச் சொல்லகராதியை உருவாக்கிட வேண்டியமைக்கான அவசியம் :

தற்காலத் தமிழகப் பரப்பு வெளியில் நிகழ்ந்து வருகிற நவீன வாழ்முறை இயங்கியலுக்கேற்ப, கையாளப்பெறுகிற சொற்களிலும், இவை உணர்த்திட முயலுகிற பொருட்களிலும் பலவேறுபட்ட முரண்பாடுகள் நிலவி வருகின்றன. குறிப்பாக, 'செல்போன்' எனும் தொடர்புக் கருவியைக் குறிப்பிடச் 'செல்லிடப் பேசி', 'கைபேசி', மொபைல்போன், அலைபேசி... என்கிற விதங்களில் பெயரிடல்கள் அமைந்து, ஊருக்கு ஊர், ஆளுக்கு ஆள் என நீண்டு வேறுபட்டு, பரவிப்படர்கின்றன. இதே வேளையில், 'கூழ்' குடிக்கப் பயன்படுத்திய 'கும்பா'வோ, கால் கழுவிட உபயோகப்படுத்திய 'பொல்லாப் பானை'யோ மதுரை மண்ணிலேயேகூடக் காலாவதி ஆக்கப்பட்டிருக்கின்றன. இவைபோன்ற பொருட்களானவை பரணில் கவிழ்ந்து வைக்கப்பட்டிருந்தாலும் சரி, பழைமை எனக் கூறி ஒழிக்கப்பட்டு விட்டாலும் சரி; இவை நாம் கடந்து வந்த பண்பாடுகளை, வரலாறுகளைப் பறைசாற்றும் திறத்தனவாகும். எனவே, இப்பாத்திரங்களைப் பாதுகாக்கா

விட்டாலும் கூட, அவற்றின் பெயர்களையாவது பதிந்து, பதப்படுத்தி வைப்பதென்பது வாழ்நிலை அறம். இதற்காகவேணும் 'மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி'யானது உருவாக்கப்படுதலென்பது வேண்டும்.

## மதுரை வழக்குச் சொல்லகராதியை உருவாக்குகிற போது கவனத்திற் கொள்ள வேண்டிய செயல்நிலைகள் :

நெடிய வரலாற்றுச் சிறப்பும், ஆழ்ந்த ஆன்மீகப் பின்புலமும், செறிவுற்ற சமயச் சாயல்களும் ஒருங்கே பெற்றதாகவும், 'சங்கம்' வைத்துத் தமிழை வளர்த்ததாகவும் காலகாலமும் புகழப்பெற்று வரப்படுகிற 'மதுரை' எனும் இவ்வூருக்கு, சங்ககாலம் முதல் சமகாலம் வரையிலுமாகவும் கூட, பலதரப்பட்ட இலக்கியப் பிரதிகளையும் தொடர்ந்து செய்தே வருகிறது என்கிற பெரும் பெயரும் உள்ளதென்பது நிஜந்தான். ஆனால் கரிசல், கொங்கு, நாஞ்சில், குமரி என விரிகிற பிற பிரதேச வட்டார வழக்கு அகராதி உருவாக்கம் எனும் செயற்பாட்டிலிருந்து மட்டும் ஏனோ இதுவரை தன்னை இயைத்துக் கொள்ளாதது என்பது இம்மதுரைக்குப் பெருங்குறையே. இக்குறையை நிவர்த்திக்க முயலுகிற ஒருவர் முதலில் செய்ய வேண்டியது மதுரை மாநகரின் வரலாற்றோடு, சாமானிய மக்களின் வரலாற்றையும் நுணுகி அணுகிக் கற்பது என்பதே. இதனையடுத்து, மதுரையிலுள்ள 10 வட்டங்களை, 15 வட்டாரங்களை, 2048 ஊர்களை, 100 நகர வார்டுகளை, இவற்றுள் வாழுகிற (15,28, 308 ஆண்களை,15,12,430 பெண்களை/மொத்தமாக 30, 41,038) அனைத்து மக்களைப் பற்றி, அவர்களின் வாழ்வியல் நடத்தைகளைப் பற்றி, அணுக்கமாக ஆகி, அறிந்து கொள்ள முற்படுதல் என்பதும் இதனுள் அடங்கும். இவ்வித அணுகலின் போது, மதுரை வட்டாரம் என்பதானது ஒற்றைச் சட்டகத்துள் அடங்கியேயிருக்கும் என்கிற முன்யூகத்தை நிச்சயம் தவிர்த்திருக்க வேண்டியதென்பதும் அவசியம். இத்துடன், மதுரையானது நகரப்புரம்–கிராமப்புரம் என்கிற இருபெறும் பாகுபாடுகளைக் கொண்டிருத்தலையும், இப்பாகுபாடுகளிலுங்கூட மத, இன, ஜாதிய, மொழி மற்றும் நிலவியல் ரீதியான கிளைப் பாகுபாடுகள் உள்ளடங்கப் பெற்றிருக்கின்றன என்பதையும் உணர்ந்திருத்தல் என்பது மிக மிக அவசியம்.

## மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதியை உருவாக்குகிற முறைமைகள் :

மதுரைக்கான வட்டார வழக்கு அகராதியை உருவாக்கிட முனைவோர், பிற புலத்தவரால் அகராதித் தயாரிப்புக்கென, இதுவரைக் கைக்கொள்ளப்பெற்ற வழக்கமான செயற்பாடுகளான மக்களின் பேச்சை, அவர்கள் வாழுகிற பிரதேசத்தை, செய்கிற தொழிலை, மேற்கொள்கிற

வழக்காறுகளை எல்லாம் ஆழ்ந்து அவதானித்து அறிதல் வேண்டும் என்கிற செயல்நிலைகளோடு, சில பிரத்யேகச் செயற்பாடுகளையும் கைகொண்டே ஆக வேண்டும். குறிப்பாக, தமிழகத்தின் பிற புலங்களில் வழங்காத சொற்களை அடையாளங் கண்டு, தெளிந்து கோர்த்தல் வேண்டும். அடுத்தது, ஒரு வழக்குச் சொல் எந்தவிதப் பின்புலத்தைக் கொண்டு அர்த்தத்தைப் புலப்படுத்த முயல்கிறது என்பதிலும் தெளிவு வேண்டும். இவற்றோடு, தமிழகம் தவிர்த்த மதுரைக்கே மட்டும் பிரத்யேகமாக உள்ள எதிர்சேவை, மஞ்சுவிரட்டு, மொய் விருந்து, வசந்தவிழா, கோவிந்தக் கொள்ளி முதலான செயற்பாடுகளின் வாயிலாகத் திரளுகிற சொற்களை எல்லாம் அனுமானித்து அறிகிற திராணி வேண்டும், இத்துடன், நாட்டுப்புறத்தாரை வயதில் மூத்தோரை/பன்முகத் தொழில்களில் பிணைந்திருப்போரைப் பெரிதும் அணுகி, நேர்காணல், உற்றுநோக்கல், வினாநிரல், கலந்துரையாடல் மூலமாக, அம்மக்கள் வழிப் பெறலாகிற கதைகள், கதைப்பாடல்கள், புழங்குபொருட்கள், செய்தொழில்கள், வாழ்க்கை அனுபவப் பகிர்வுகள் முதலானவற்றிலிருந்து வார்த்தைகளைத் திரட்டி, அவற்றிலும் அரிதாகி வருகிற பொருட்களை நிழற்படங்களாக ஆக்கி, அகர நிரல்படுத்தி, அகராதியாக்கிட வேண்டும். இவ்விதப்பட்ட முறைமைகளுள் கவனஞ் செலுத்துகிற பட்சத்தில் மட்டுமே, 'மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கம்' என்பது முழுமை பெறும்.

## மதுரை வட்டார வழக்குச் சொல்லகராதியின் பயன்பாடுகள் :

மானுட வாழ்நிலையோடு மிக நெருக்கமாகப் பிணைந்திருப்பது மொழி. இதனை முன்னரேயே உணர்ந்திருந்த மதுரை மக்கள், சங்கமெனும் அமைப்பை நிறுவி, மொழியைச் செறிவுபடுத்திய செயற்பாடுகளில் தம்மை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டிருந்தனர் எனும் கூற்றானது மறுக்க முடியாதவொன்று. இவ்வகைப்பட்டோர் ஏனோ, இன்றளவிலுங் கூடத் தம்மிடமுள்ள அரிய சொற்களஞ்சியங்களைப் (ஈராங்காய் –வெங்காயம், வெஞ்சனம்–கறி, சிய்யான்–தாத்தா, தொண்ணொரு–கிடைக்காமல் காத்திரு, ராவுதல்–தேடுதல்) பாதுகாத்திட என, முன்முனைப்புக் காட்டாதிருத்தல் என்பது வியப்பைத் தருகிறது. இவ்வித முனைப்பு முன்னெடுக்கப்படுகிற பட்சத்தில் மட்டுமே மதுரை வட்டார வழக்குச் சொற்கள் மற்றும் பேச்சு வழக்குச் சொற்களானவை பாதுகாப்புற்றுப் பொதுவெளிக்கு வரும். இவ்வித வருகையின் விளைவாக, பிற புலத்தாருடன் தம் தொடர்பை மிக நெருக்கமாக்குதலுடன், சமகால மதுரை மக்களின் வாழ்வியல் நடத்தைப்பாடுகள் அனைத்தும், பற்பல படைப்புப் பிரதிகளாக ஆக்கலுற்று, பிற புலத்தாரிடஞ் சென்று சேர்ந்து அணுக்கமாகவும் ஆகிடும். இத்துடன், அன்றாடப் பயன்பாட்டு

வழக்குக்கெனப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சொற்கள், வழக்கு விழுந்த சொற்கள், ஒலித் திரிபுற்று மருவிய சொற்கள், கொச்சை வடிவங்கள், பிழைபட்டவை, வேற்றுமொழி மற்றும் வேற்றுப் புலத்திருந்து கடன்பெற்ற சொற்கள் முதலானவற்றை இனம்பிரித்தறியவும் உதவும். மொத்தத்தில், தம் மொழிச் செழுமையைப் பாதுகாத்தலோடு, சமகால ஊடகங்களின் தாகங்களுக்குப் பிச்சை போடவும், நடப்புச் சூழலோடு ஒத்திசைந்து நகர்வு பெறவும் கூட இது உதவியாக இருக்கும்.

**நிறைவாக ...**

தமிழ் மொழியானது, தான் தோன்றிய ஈராயிரமாண்டுக் காலந்தொட்டே, எழுத்து–பேச்சு என இரு வேறுபட்ட வழக்காகப் பாகுபடுத்தலுற்று, பயன்படுத்தி வந்துள்ள நெடிய மரபானது 'நவீனமயப்படுத்தப் பெறுதல்' காரணமாக, நடப்புக் காலத்தில் புறந்தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 'உலக முழுவதுக்குமான ஒரே மொழிப் பயன்பாட்டு முறைமை' எனும் சீர்மையாக்கமானது தமிழகப் பிரதேச அடையாளங்களைப் பெரிதும் அழிக்க முற்பட்டிருக்கிறது. விளைவு: வசிக்கிற நிலம், செய்கிற தொழில், கடைப்பிடிக்கின்ற பண்பாடு, ஏற்றுச் செயல்படுகிற வழக்காறுகள் முதலானவற்றோடு, புழங்குகிற மொழியையுங் கூட இழக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தமிழகத்தின் சாமானிய மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். இவ்வித அழிவுப்பாட்டிற்கு மிக அருகில் இருப்பவர்களாக 'மதுரை வாசிகளே' தென்படுகின்றனர். இதனிலிருந்து இவர்கள் விடுபட வேண்டின், தமது இயல்பாம்சங்களை, தமக்கேயுரிய எண்ணப்போக்குகளை, மற்றும் ஏனைய பிற செயல் துடிப்புகளையெல்லாம் மண் மணம் மாறாது, பதிவு செய்து வைத்துக் கொள்ளுதல் என்பது உடனடியாகச் செய்ய வேண்டிய காரியமாகிறது. இதன் ஒரு பகுதி தான், 'தாம் பேசுவது போலவே எழுதுவது' என்பதும்; அவற்றைப் பிறபுலத்தாரும் விளங்கிக் கொள்ளுவதற்கு ஏதுவாக, தமது வட்டாரத்திற்கே உரிய வழக்குச் சொல் அகராதியொன்றை உருவாக்குதல் என்பதும். இவ்விதச் செயல்பாடு நிறைவுபடின் மதுரை வட்டாரப் பண்பாட்டு வெளியானது மாண்பு பெறும்.

**குறிப்பு**

செப்டம்பர் மாத இதழில் பக்கம் 26இல் வெளிவந்த "வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா மலர் அரங்கு ஆடுமா?" என்ற தலைப்பு தவறுதலாக வெளியிடப்பட்டுள்ளது. இத்தலைப்பினை "வினைத் தொகை" என மாற்றி வாசிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

–ஆசிரியர்

## சங்கச் செய்திகள்

19.9.2016 ஆம் நாள் திரு.வி.க.அவர்களது நினைவேந்தல் முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. பேராசிரியை ச.அங்கயற்கண்ணி அவரது உரையில் திரு.வி.க எவ்வாறு தமிழாசிரியராக இருந்து, பத்திரிக்கை ஆசிரியராகப் புகழ்பெற்று, அரசியல் தலைவராய் விளங்கி, தொழிலாளர் தலைவராகச் சிறப்புற்று, தமிழறிஞராய், எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார் என்பதையும், இலக்கிய உலகிற்கு அன்னாரது பங்களிப்பு குறித்தும் விளக்கினார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகத் திரு.வி.க. அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

26.9.2016 ஆம் நாள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியச் சிற்பிகளில் தனியொரு இடத்திற்கு உரியவரும் தமிழில் குழந்தைப் பாடல்கள், அங்கதக் காவியம், தழுவல் படைப்புகள் ஆகிய துறைகளில் முன்னோடியாகவும் திகழ்ந்த கவிமணி அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அன்னாரது சிறப்புக்களையும் வாழ்க்கை வரலாற்றையும் துணைமுதல்வர் கி.வேணுகா அவர்கள் மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

27.9.2016 ஆம் நாள் சுவாமி விவேகானந்தர் நினைவேந்தல் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி பாண்டியன் நூலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திருமிகு. ச.மாரியப்ப முரளி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பிரிகேடியர் திருமிகு.ஜெ.எம்.தேவதாஸ் அவர்கள் ''சமுதாயத்தில் இளைஞர்களின் பங்கு'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மேனாள் சட்டமன்ற உறுப்பினர் நன்மாறன், மேனாள் போராசிரியர் திரு.க.செயமூர்த்தி மற்றும் மேனாள் காவல்துறை அதிகாரி கவிஞர் பேனா மனோகரன் ஆகியோரும் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் வீ.அதிவீர பாண்டியன், மு.வினோத்குமார் ஆகியோரும் விவேகானந்தரை நினைவு கூர்ந்தனர்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக முதல்வர் (பொ.)முனைவர். சு.விஜயன் வரவேற்புரை ஆற்றினார். துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா நன்றி கூறினார். நிகழ்ச்சியில் சங்கப் பொதுக்குழு, ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

30.9.2016ஆம் நாள் இராய.சொக்கலிங்கனாரின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியை முனவர் பெ.இந்துராணி இராய.சொக்கலிங்கனார் அவர்கள் காந்தியடிகளை முதன்முதலாகத் தமது இல்லத்திற்கு விருந்தினராகப் பெற்ற பெருமை குறித்தும் இதழியல், படைப்பு மற்றும் அவரது பல்கலைக் கழகப் பணி குறித்தும் பேசினார். முன்னதாக இராய.சொக்கலிங்கனாரின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## பாண்டித்துரைத் தேவரின் சங்கீத விநிகை

6—ஆம் வருடம் நவம்பர் மாதம் பாலவநத்தம் ஜமீன்தாராகிய பொ.பாண்டித்துரைத்தேவர் கும்பகோணத்தி லிருந்த மௌன சுவாமிகளைத் தரிசிப்பதற்கு வந்தார். அக்காலத்தில் அவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்துப் பல கனவான்கள் கூடிய மகாசபையில் அவரைப் பேசச் செய்தேன். இரண்டு மூன்று நாட்கள் அவர் கும்பகோணத்தில் தங்கியிருந்தார். என் வீட்டுக்கு ஒரு முறை வந்தார். அப்போது பல அன்பர்களையும் அழைத்து உபசரித்து அவருடன் வந்திருந்த சங்கீத வித்துவான் சீனுவையங்கார். திருக்கோடி கா.கிருஷ்ணையர் முதலியவர் களைக் கொண்டு என் வீட்டில் ஒரு சங்கீத விநிகை நடைபெறச் செய்தேன். என்னிடமிருந்த ஏட்டுச் சுவடிகளையெல்லாம் பாண்டித்துரைத் தேவர் பார்த்துப் பெருவியப்புற்றார். மணிமேகலை அப்போது அச்சாகி வருவது தெரிந்து அதற்குப் பொருளுதவி செய்வதாக வாக்களித்தார்.

## வாசகர் கடிதம்

2016 ஆகஸ்டு செந்தமிழ் இதழில் முதுமுனைவர் ஐயா இளங்குமரனாரின் எழுத்தே எழுத்து! தனிப்பெரும் எழுத்து! மொழிக் கலப்பாளர்களுக்குத் தந்த சாடல் எழுத்து! வரவேற்புக்குரியது!

ஐ, ஔ எனும் ஓரெழுத்து ஒருமொழி பற்றிய குறிப்புகள் அருமை! அருமை! வேதாளம் முருங்கைமரம் ஏறியதுபோல ஐ, ஔ–தம்மை அய், அவ்–ஆக்கமுனைவோர் மூக்கறுபடலாய் எழுதிய ஐயா அவர்களின் எழுத்துக்கிணையுண்டோ! முன்பு முதல்வராயிருந்த மதிப்புயர் ம.கோ.இரா.(எம்.ஜி.ஆர்) அவர்கள் சிலரின் தூண்டுதலால் ஐ, ஔ தவிர்த்து அய், அவ்–எழுத அரசாங்கச்சுற்றறிக்கையே வந்தது. எல்லாக் கல்வி நிறுவனங்கட்கும் வந்தது.

அப்போது முத்தமிழ்க் காவலரும் தமிழ்ச் செம்மல் வ.சுப.மாவும் முதல்வரைச் சந்தித்து இந்த ஆணையைத் திரும்பப் பெற வலியுறுத்தினர். நம் முதுமுனைவர் சுட்டியதெல்லாம் சுட்டியதற்கும் மேலாகச் சுட்டிய ஒன்றே முதல்வரைச் சிரிக்க வைத்ததோடு உடனடியாய் ஆணையைத் திரும்பப் பெறச் செய்து பழைய ஐ, ஔ – பரிந்துரைத்த ஆணை மீண்டும் எல்லா இடங்கட்கும் அனுப்ப ஏதுவானது. அதாவது “ஔவைப் பாட்டி என்றால் ஔவை யாரைக் குறிக்கும்; அவ்வைப் பாட்டி என்றால் படிப்பவர் அவ் வைப்பாட்டி எனக்கேலியாகப் படித்து விட்டால்...” என எடுத்துரைத்த போது முதல்வரே சிரித்து விட்டதாக முத்தமிழ்க் காவலரும் வ.சுப.மா. அவர்களும் கூட்டத்தில் கூறக் கேட்டுள்ளேன். ஐ, ஔ என்பனவற்றின் போலிகளே அய், அவ் தேவைக்கு ஒரோ வழி வரவே தொல்காப்பியர் வழி வகுத்தார். இதை உணர்வோர் உணர்வர்! உணரார் உணராதாரே!

–தெ.முருகசாமி

## செந்தமிழின் தொண்டு வாழ்க!

*குறட் சிறப்பை இளங்குமரன் எடுத்துரைக்க*
*குறுந்தொகையின் கட்டமைப்புப் பொருள் விரித்தே*
*அரன் போற்றும் தேவார நெறிபு கன்றே*
*ஆண்டுவிழா மலரரங்கில் ஆடவிட்டு*
*சிறுபஞ்ச மூலத்தின் சிறப்பும் சொல்லி*
*செம்மாந்த உலகியலோ டிலக்கியந்தான்*
*நறுமணம்சேர் நற்றமிழின் நடமே ஆடும்*
*நல்லிதழாம் செந்தமிழின் தொண்டு வாழ்க!*

அன்புடன்,
புலவர்.ந.ஞானசேகரன், திருலோக்கி

## நவம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




பரிதிமாற்கலைஞர்
( நவ 2 - 1903 )




மன்னர் பாஸ்கர சேதுபதி
( பிறப்பு நவ 3 - 1868 )



சோமலே.கி.வா.ஜகந்நாதன்
( நவ 2 - 1903 )



சங்கரதாசு சுவாமிகள்
( நவ 13 - 1922 )



ந.பிச்சமூர்த்தி
( நவ - 16 )



வ.உ.சிதம்பரனார்
( நவ 18 - 1936 )



அ.சிதம்பரநாதனார்
( நவ 22 - 1967 )



மருதகாசி
( நவ 29 - 1989 )


பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 DECEMBER 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி



## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்க சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY**
The Fourth Tamil Sangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001. Tamilnadu.

பெறுநர் / To,

Book Post

வெளியிடுபவர் : **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்க சாலை, மதுரை – 625 001. 0452 – 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403
அச்சிட்டோர் : **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : 97894 95738